
REGD. M. 4642,

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 21–12–47 | இதழ் 29



## ஏழேமாதத்தில்
## ஏழு இலட்சம்!

மாஸ்கோவில் அமைக்கப்பட்டுள்ள, இந்திய ஸ்தானீகராலயத்துக்கு, 7-மாதங்களில், 7,56,600 ரூபாய் செலவாகிஇருக்கிறது. மாதம் ஒரு இலட்சத்துக்குமேல்! இது, நடைமுறைச் செலவு. இந்த நிலையத்துக்கு, மரச்சாமான், (சோபா முதலியன)வாங்குவதற்கு இரண்டு இலட்ச ரூபாய் செலவிடப்பட்டது.

மரச்சாமான்கள், ஸ்விடன் நாட்டிலே தயாரிக்கப் பட்டவை. இந்தஸ்தானீகர், பண்டிதநேருவின் சகோதரி, விஜயலட்சுமி அம்மையார்! செலவான தொகைவிவரம், பண்டித ஜவஹரால், அசெம்பிளியில் கூறப்பட்டது.

ஏழையின் பணம் இப்படி ஏழுமாதத்தில் ஏழுலட்சத்துக்கு மேல் இந்தஸ்தானீகராலயத்துக்குச் செலவாவது, சரியா?

"என்னய்யா! என் உழைப்பு இப்படியா, பாழாகுது" என்று கேட்கிறான், உழவன்—பேசி அல்ல—பரிதாபமிகுந்த அவன் பார்வையால்!

# உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்

(முருகு) இராதாகிருஷ்ணன்

இந்தக் காலத்தில் உழவர்களின் நிலை, ஏனையோரை அவர்கள் தொழுது வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. "பாடுபட்டவர்கள் படுக்கையில்லாதொரு—பட்டியில் மாடெனவாழ்கின்றீர்" என்ற கவிஞர் கூற்று விவசாயிகளுக்குத்தான் பொருந்தும். சங்க காலத்திலிருந்து பாரதிதாசன் காலம் வரையிலுமிருந்த தமிழ்ப்புலவர்கள் உழவர்களுடையநிலையையும், வேளாண்மையையும் குறித்து அழகாகப் பாடியிருக்கிறார்கள். ஆனால்,

"கந்தையணிந்தோம்—இரு
கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்.
மொந்தையிற் கூழைப்—பலர்
மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்.
சந்தையில் மாடாய்—யாம்
சந்ததம் தங்கிட வீடுமில்லாமல் சிந்தை மெலிந்தோம்."

என்ற தற்காலப் படப்பிடிப்பைக் காட்டவில்லை. இந்த 'நிலையிலேயே அவர்களை விட்டுவைத்தால் எப்பொழுது அவர்கள் முன்னேற்றமடைவது? வாழவைப்பதற்கு முடியாதா? நாட்டிலே பஞ்சம் வராமல் தடுக்க முடியாதா? கிராமப்புனருத்தாரணம் வெறும் பேச்சளவில் நிற்கவேண்டுமா? வேண்டாம் என்றால் விவசாயிகளை முன்னேற்ற வழி ஏற்படட்டும்.

நல்ல பருவமழை பெய்யும்—ஜீவநதிகள் ஓடும் நம் நாட்டில் உணவுக் குறைவு ஏற்படுகிறது. கிராமங்களில் சென்றால் 'பச்சைப்பசேல்' என்ற தோற்றம் காணுகிறோம். இருந்தும், போதவில்லை என்றால், விளை நிலங்களில் போதிய அளவுக்குப் பயிரிட முடியவில்லை என்றால், உற்பத்தியைப் பெருக்க—நிலங்களில் ஒன்றுக்கு மூன்றாகப் பலன் ஏற்படுத்த வழி ஏற்படவில்லை என்றுதான் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே விவசாயிகளை முன்னுக்குக் கொண்டுவரும் வழிகளை ஆராய்ந்து கடைப்பிடித்தால் அயல்நாடுகளுக்குக் 'காவடி' எடுக்கும் நிலை வேண்டுவதில்லை.

சாதாரணமாக விளைநிலங்கள் அதிகமான தானியங்கள் கொடுக்காததின் காரணங்கள், ஒன்று:-நிலம் ஆழமாக உழப்படாதது, மற்றொன்று போதிய உரங்கள்—எருக்கள் உபயோகப்படுத்தாதது. மூன்றாவது மழையில்லாமை எனலாம். இறுதியாகச் சொல்லப்பட்டது நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மிக மோசமாக இல்லை. எனவே அதைச் சாக்காகக் கொண்டு விவசாயம் பெருக முடியவில்லை என்று கூறக்கூடாது. எங்கெந்த முறைகளில் விவசாயிகளை உயர்வடையச் செய்யலாம் என்பதை ஆராய்வோம்.

நம் நாட்டு விளை நிலங்களுக்கு மேல்நாட்டு முறைகளைப் பெரிதும் கையாண்டால், பலன் மிகுதியாயிருக்கும். அங்கு உபயோகிப்பது போல் இயந்திர உழு சாமான்களும் (Ploughing Machinery) ரசாயன உரங்களும் நாம் உபயோகிக்க முடியவில்லை. காரணம், நம் விவசாயிகள் பெரும்பாலோர் ஏழைகள். எனவே, வாங்குவதற்குப் போதிய பணம் இல்லை. கல்வி அறிவில்லாதவர்கள். மேலும் நம் நாட்டு நிலங்கள் துண்டு துண்டாக இருப்பதால் இயந்திர உதவி புகுத்த முடியாது.

சாதாரணமாக ஒரு ஏக்ராநிலத்திலிருந்து நம் விவசாயிக்கு வருடா வருடம் ரூ. 200 வருமானம் கிடைக்கிறதென்று மதிப்பிட்டால், அதில் 30 ரூபாயாவது அரசாங்கத்துக்கு நிலவரியாகக் கட்டவேண்டும். குறைந்தளவு 50 ரூபாயைத்தான் வாங்கிய கடனுக்கு வட்டியும் கொஞ்ச அசலும் சேர்த்துத் தரலாம். மீதியிருக்கும் 120 ரூபாயில் வருட முழுதும் காலம் தள்ளுவதென்றால்—குறைந்தது ரூபாய் 10 அவன் மாதச் செலவானால், அவன் எங்ஙனம் வாழ்க்கை நடத்த முடியும்? மேல் நாட்டு இயந்திர சாமான்களையும், ரசாயன எருக்களையும் எப்படி வாங்க முடியும்? ஒரு ஏரையும், மாடுகளை[illegible] வைத்து நடத்தவே அவனால் முடியவில்லையென்றால், நவீன கால[illegible] கசப்பாகத்தான் தோன்றும்!

அப்படியானால் அவனை எப்படி முன்னுக்குக் கொண்டு வருவது? எல்லா விளை நிலங்களும் உழுபவனுக்கே சொந்தமாக்கப்படவேண்டும். தனித்தனியே நிலங்க[illegible]த்துப் பயி[illegible]வதைவிடக் கூட்டுப்பண்ணை வைத்து நடத்தினால் மிகவும் இலாபகரமாயிருக்கும். இங்கிலாந்தில் 26 ஏக்ரா நிலங்களும், கனடாவில் 140 ஏக்ரா நிலங்களும் இந்த முறையில் பயிரிடப்படுகின்றன. அரசாங்கம் சில சிறு கிராமங்களைச் சுற்றி ஒரு விவசாயக் கல்விச்சாலை அமைக்க வேண்டும். அதையொட்டி ஒரு ஆராய்ச்சி ஸ்தாபனம் (Agricultural Research) ஏற்படுத்தவேண்டும். இதன் மூலம் உழவர்களுக்கு வேளாண்மையின் பண்பை எடுத்துரைக்கவேண்டும். ரசாயன எருக்கள் (Chemical Manures) உற்பத்தி செய்து உபயோகிக்கும் விதத்தையும் கற்றுக்கொடுக்கவேண்டும்.

நிலங்கள் தனித்தனியாக இல்லாமல், எல்லா நிலங்களும் கூட்டுப் பண்ணையில் இணைக்கப்படவேண்டும். உழுவதற்கு மேல்நாடுகளில் உபயோகிக்கும் உழும் இயந்திரங்கள் (Ploughing Machinery) உபயோகிக்கலாம். அங்கெல்லாம் ஒவ்வொரு இயந்திரமும் நிலத்தை உழுது, விதை விதைத்து, அறுவடை செய்கின்றன. இதனால மனித உழைப்புக் குறைகிறது. நெற்றி வேர்வை நிலத்தில் விழுமளவுக்குப் பாடுபடவேண்டியதில்லை. அவைகளால் உழுதால் நிலம் ஆழமாக உழப்பட்டு பயிர் செழுமையாக வளர முடிகிறது. ஸ்வீடன் தேசத்தில் மின்சார ஓட்டத்தை (Current) பூமிக்குள் மின்சாரக்கம்பி (Cable) மூலம் செலுத்தி உஷ்ணப்படுத்தினால் பயிர் சீக்கிரமாக விளைகிறதென்று ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

இனி, இயந்திர சாமான் வாங்கப் போதிய பணம் இல்லையே! கடன் வாங்கினால் எப்பொழுது கொடுப்பது! அந்தச் சாமான்களும், எருக்களும் உயர்ந்த விலைகளாயிற்றே என்று கேள்விகள் கேட்கத்தோன்றும். அதற்காகத்தான், அரசாங்கம் ஒரு கூட்டுறவு சங்கம் (Cooperative Society) ஏற்படுத்தி விவசாயிகள் வாங்குவதற்குக் கடன் கொடுக்க வேண்டும். இக்க[illegible], அறுவடையான பிறகு தான் திருப்பி[illegible]. மேலும் சர்க்கார், விவசாயத்திற்கென்று ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி இயந்திர சாமான்களையும் ரசாயன எருக்களையும் அவர்களுக்குக் குறைந்த விலையில் விற்கவேண்டும். இல்லாவிடில், சென்ற யுத்தத்தில் மிச்சமான [illegible] டிராக்குகளை (Trucks) சீர்திருத்த[illegible]

(20-ம் பக்கம் பார்க்க)

# ரயிலேறி ராமேஸ்வரம் போவது.............!

## புத்தறிவும் புராணநிலையும்

எல்லையற்ற இடம்! எதும் இல்லை! ஒளி, ஒலி, உருவம், மலை, மடு, மாநதி, மரம், புல்பூண்டு, ஒன்றும் இல்லை. பார்க்குமிடமெங்கும் நீக்க மறத்தெரிகிறது, பரந்த வெளி. வேறு எதுவும் இல்லை. கடலா அது? இல்லை! கடலெனும் உருவம் படைக்கப்படாத காலம் அது. மண்ணா, விண்ணா? இரண்டுமல்ல! மண்ணும் விண்ணும், முன்னதில் மாந்தரும், பின்னதில்சூரிய சந்திர நட்சத்திராதிகளும், அமைவதற்கும் முன்னால் இருந்தது, ஓர் பெரும் வெளி—எல்லையற்ற வெளி. காலத்தின் துவக்கம்.

இந்தப் பெருவெளியிலே, காலம், கண் விழித்தது.

வெளியிலே, ஓர் குரல், கொந்தளிப்பு ஏற்பட்டது. புகை சூழ்வது போல, நீர் பொங்குவது போல, பேரொலியுடன் பெரிய ஆறுகள் புரண்டோடுவது போல, ஓர் நிலை ஏற்பட்டது. எல்லையற்றவெளியிலே, இன்னதென்று புரிந்து கொள்ள முடியாத நிகழ்ச்சியின் துவக்கம். வெண்மை, கருமை, புகை, நீர், இப்படி, நிறங்களும் உருவங்களும், அசைந்து எழலாயின. மூடுபனியும், உறைந்த கட்டிகளும், தென்படலாயின. எல்லையற்றவெளி இரு கூறாகக் காணப்பட்டது. ஒருபுறம், கொந்தளிப்பு கருமை, புகைப்படலம்! மற்றோர் புறம், ஒளி அழகு, அமைதி!

இருண்ட பகுதியிலே, இறைவன் கட்டளைப்படி, வெப்பக்கதிர்கள் புகுந்தன. பனி கரையலாயிற்று! ஓரளவு, கரைந்தானதும், அங்கிருந்து, மெள்ள மெள்ள, ஆடி அசைந்து கொண்டு, கிளம்பிற்று, பிரம்மாண்டமான ஓர் உருவம்! அந்த உருவம் அரைத் தூக்கத்திலேயே இருந்தது. கோரமான அந்தப் பேரசுரனின் பெயர், யெமர். விழித்தெழுந்ததும், அவனுக்கு கடும்பசி ஏற்பட்டது. என் செய்வான்?

பசி! பசி! பசி! — சுற்றுமுற்றும் பார்க்கிறான்—பசி போக்க ஏதும் காணப்படவில்லை. எங்கும் உறைந்த பனி, உருகும்பனி, காற்று, வேறு ஏதுமில்லை. பசியோ வாட்டுகிறது. யெமர் திகைத்தான்—உண்ண ஏதேனும் கிடைக்குமா என்று அலையலானான். கடும்பசி அவனுக்கு—பெருங்காற்று அவனைச் சுற்றி. காலத்தின் துவக்கத்தில் தோன்றிய பேரசுரன், பெரும்பசி தாங்கமாட்டாமல், வேதனையுடன் உலவலானான். கடவுளின் கட்டளைப்படி, வெப்பக்கதிர்கள் தமதுவேலையைச் செய்துகொண்டே இருந்தன. உறைந்து கிடந்த பனிக்கட்டிகள் உருகியபடி இருந்தன. யெமர் எனும் பேருருவம்தோன்றிய விதமாகவே, மற்றோர் உருவமும் தோன்றிற்று. அந்த உருவம், பிரமாண்டமான ஓர் பசு!

பசுவின் பெயர், ஆதும்லா. உறைந்த பனி மீது கடவுளின் ஆணைப்படி கதிர்கள்பட, அது உருக, உருகாத பகுதியினின்றும் உருப்பெற்றெழுந்த ஆதும்லா எனும் பசுவைக் கண்டான் யெமர். வியப்புற்றான்! முதல் உருவம், இரண்டாவதாக எழுந்த உருவம் கண்டு, இதுயாது? என்று ஆச்சரியப்பட்டு, அருகே சென்றது, தள்ளாடிக்கொண்டு! பசுவைச்சுற்றிலும், மூடுபனிப் படலம். அருகே சென்று பார்க்கும் போது, ஆதும்லா வின் மடிக்காம்புகளிலிருந்து, பால்வழிந்து கொண்டிருக்கக் கண்டான். நாலு வெண்ணிற ஆறுகள் பெருக்கெடுத்தோடுவது போல, வழிந்து கொண்டிருந்த பாலை, பேரசுரன், பருகலானான். பருகினான், பருகினான், பசி தீருமளவு பருகினான், மயங்கிக் கீழேசாயுமளவு பருகினான்! சாய்ந்தான், உறங்கினான்.

பால் கொடுத்து பேரசுரனை ரட்சித்த பசுவுக்குப் பசி பிறந்துவிட்டது. புல்லும் பூண்டுமற்ற இடம். பசு கலங்கிற்று.

பக்கத்திலே இருந்த ஒரு பனிப்பாறையை நாவினால் தடவித்தடவிப் பார்த்தது — அலுத்தது — பசி தீரவில்லை.

பசுவுக்குப்பசி தீரவில்லையே தவிர, அதன் நாவின் தடவுதல் பயன் தராது போகவில்லை, பனிப்பாறையின் ஊடே இருந்து ஏதோ உருவம் தெரியலாயிற்று. மூன்று நாட்களுக்குப் பிறகு, பசுவின்நா, பட்ட பாறை, கரைந்தது, முதல் தேவன் தோன்றினான். அவன் அழகன். பெயர் ப்யூர்.

பிறகு, இருண்டபகுதியிலிருந்து, யெமர் போன்றவர்களும், ஒளிப்பகுதியிலிருந்து ப்யூர் போன்றவர்களும், உதித்தனர். தேவாசுரப் போர்மூண்டது! கடும்போர்! வெற்றி யாருக்குக் கிடைக்கும்என்று தீர்மானிக்க முடியாதபடியான சமர்.

இறுதியில் யெமர் வீழ்த்தப்பட்டான். வீழ்ந்த பேரசுரனின் உடல் மீது தாவினர் தேவர்கள். கழுத்து நரம்புகளை அறுத்தனர். இரத்தம் ஆறென ஓடிவரலாயிற்று. அந்த இரத்தம், வழிய வழிய, ஆறளவிலிருந்து கடலளவாகி, அதிலேயே, யெமரின் சகாக்கள் மூழ்கி மடிந்தனர். பிறகு, யெமரின் உடலை, உலக ஆலை எனும், பொறியைச் செலுத்திக் கொண்டிருந்தவர்களிடம், தேவர்கள் தூக்கிச் சென்றனர். மாவரைக்கும் யந்திரம் போன்ற அந்தப் பொறியை ஒன்பது அசுரமாதர்கள், செலுத்திக் கொண்டிருந்தனர். அகோரக் கூச்சலுடன் ஆடிக்கொண்டிருந்த அந்த ஆலையிலே, பேரசுரனின் உடலைப்போட, உடல், சின்னபின்னமாக்கப்பட்டது. எலும்புகள், மலைகளாக மாறின! பற்கள், பெருங்கற்களாயின! இரத்தம், கடலாயிற்று! உடல், உலகமாயிற்று! மண்டை ஓடு, வானமாயிற்று! பிரபஞ்சம், இவ்விதம் சிருஷ்டிக்கப்பட்டதும், விண்ணிலே, சூரியன் சந்திரன், நட்சத்திரங்களைப் புதைத்தனர்.

* * *

நம்புகிறீர்களா? நகைக்கிறீர்களா? நம்ப மறுப்பீர்கள்! ஆனால் இதை நம்ப மறுத்தவர்களை நாஸ்திகர்கள் என்று நிந்தித்த, தண்டித்த மக்கள் இருந்தனர். உலகம் உண்டான விதம் இதுதான் என்றுநம்பி, பேரசுரனின் பிணமே இப்பிரபஞ்சம்

என்று பேசிப், பசுவைவணங்கிய மக்கள், இருந்தனர்.

இப்படியும் ஒரு காட்டுமிராண்டிக் கூட்டம் உண்டா! எல்லையற்ற வெளியிலே ஒரு பேருருவம் தோன்றுவதாம்! அதற்குப் பால்தர ஓர் பசுவாம்! அந்தப் பசுவின் நா பட்ட இடத்தில் தேவனும்! இவ்விதமாக ஒரு கூத்தா! சே! என்று கூறிடத் துணிவு கொள்வோர் ஏராளமாக இருக்க முடியும். ஒருகாலம் இருந்தது, இந்தக் கதையைத் தேவரகசியம் என்று பக்தியுடன் கூறிக் கொண்டாடிய காலம்!

ட்யூடன் மக்கள் பிரபஞ்சம் இவ்விதமாகத்தான் உற்பத்தி செய்யப்பட்டது என்று நம்பி, புராணம் இயற்றி அதனைத் தம் புனித ஏடெனக் கொண்டு, அதற்குத் தக்க பூஜைகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

இன்று? இந்தக்கதையை நம்புகிற கூட்டம், மேனாட்டிலே, பித்தர் விடுதிகளிலேயும் கிடைத்தலரிது. மேனாட்டிலே, ஜெர்மனி, இத்தாலி, போலந்து, கிரீஸ், எந்த நாட்டிலேயும் சரி, சென்று, அங்குள்ள பேராசிரியர்களை அல்ல, விஞ்ஞானிகளை அல்ல, கல்லூரி மாணவர்களை அல்ல, வயலில் வேலை செய்வோர், ஆலைத்தோழர், போன்றவர்களைக் கூடச்சரி, அப்பா! பிரபஞ்சம் உண்டான கதை தெரியுமா? யெமரின் பிரதாபம், ப்யூரின் பேரழகு, ஆதும்லாவின் அன்பு, தேவாசுரப்போர், இவை தெரியுமா? என்றுகேட்டால், கேட்பவனின் மனம் குழம்பிக்கிடக்கிறது என்று எண்ணி விறைத்துப் பார்ப்பரே தவிர, "ஆமாம்! அந்தத் தேவ மாகதையை மறப்பாரும் உண்டோ! அதோ பாரும், அரச மரம், அதனருகே சென்று, கிழக்குத் திசையாகச் சென்றால் ஒரு காத தூரத்தில், ஆதும்லா ஆலயம் காணலாம்—அங்கு ஆண்டுக்கொருமுறை, கல்பசுவின் காம்பிலிருந்து பால்பெருகும்! ஆண்டுக்கோர் முறை யெமர் கழுத்தறுப்பு விழா நடைபெறும்—என்றுகூறமாட்டார்கள், ஏனெனில், அறிவுக்கதிர் பரவியதும், மூளையில் படிந்திருந்த மூடுபனி கரைந்து, போய்விடவே, அங்குசாதாரண மக்களுக்கும் இப்போது, தெளிவு பிறந்துவிட்டது. பிரபஞ்சம் உண்டான விதம் எப்படி என்று கேட்டால், அதற்கென்று உள்ள பிரத்யேக விஞ்ஞான நூற்களைக் காட்டுவர். மலையும் மாகடலும், நதியும் நவநிதியும், காடும் மேடும், சூரியனும் சந்திரனும், ஒளிவிடு கதிர்களும், மழைவிடு மேகமும், அலையும் ஆவியும், இன்னோரன்ன இயற்கைச் சக்திகளும், சக்திகளை உள்ளடக்கிய பொருள்களும், ஏற்பட்ட வகைபற்றி, எண்ணற்ற அறிஞர்கள், சிந்தித்துச் சிந்தித்து, பரிட்சித்து, கண்டறிந்த உண்மைகளை, எடுகூறாக்கி, புதிய எண்ணங்களை உலவவிட்டனர். இதன் பயனாக, பழைய நாட்களிலே கட்டிவிடப்பட்ட கதைகள், சிந்துவாரற்றுப் போயின.

எந்த நாட்டிலும், ஆதிகாலத்திலே, மக்கள் குருட்டறிவு பெற்றவராகத்தான் இருந்திருக்க முடியும். இன்று பாமர மக்களுக்கும் புரியக்கூடியதாக்கப்பட்டுவிட்ட பல விஷயங்கள் பழங்காலத்தில், இருட்டறையிலே இருந்தன!

முதலிலே, இயற்கைச் சக்திகளைக் கண்டு அஞ்சவும், ஆச்சரியப்படவும், பூஜிக்கவும், புகழவுந்தான், மனிதன் பழகினான். பிறகோ, அவனுக்கு, அந்தச் சக்திகளின் இரகசியத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றஆவல் ஏற்பட்டது. அந்த ஆவல், அறிவுத்தாகம்! அப்போது, ஒவ்வொரு நாட்டிலும். ஏறத்தாழ ஒரேவிதமான கருத்துள்ள பலகதைகள் முளைந்தன. இந்தக் கற்பனைகளிலே ஒன்றுதான், முதலிலேகூறப்பட்டது. ட்யூடன் மக்கள் பலப்பலகாலம் நம்பிய, தேவ மாகதை. இங்கு பேசப்படுவது போலவே அங்கும் தேவாசுரப்போர், இங்கு கூறப்படுவது போன்ற காமதேனு, அங்கு சிறிது மாற்றத்துடன், இப்படிப் பல கதைகள் உலவின. இங்கு இன்று பழமையில் புதுமை தூவி மகிழும் பண்பினர் கூறுவர், "நமது மூதாதையர் மூடரல்ல! தேவர்—அசுரர் என்று இருவகையினரை அவர்கள் கற்பித்தனர் என்றால், அழகிய கருத்தின் மீதுதான்—அஃது என்னவோ எனில், இருளில் கெட்டதும், ஒளியில் நல்லதும், இருப்பதுபற்றி எண்ணிய நமது மூதாதையர், இருண்ட மேனியும் கருத்த கருத்தும் கொண்டவர்களை அசுரர் என்றும், ஒளிவிடு மேனியும் தூய்மையான எண்ணமும் கொண்டவர்களைத் தேவர்கள் என்றும் கூறினர்! இருளுக்கும் ஒளிக்கும் போர்! அதனையே நமது ஆன்றோர் அசுரருக்கும் தேவருக்கும் போர் என்று கதை வடிவில் கூறினர். ஒளியே, இருளை விரட்டி, வெல்லும். எனவே தேவாசுர யுத்தத்திலே, தேவர்களே வென்றனர் என்றனர் சான்றோர். இவ்வளவு, அழகுற, ஆழ்ந்தகருத்துடன், அடிப்படை உண்மையை, அனைவரும் புரிந்து கொள்வதற்காகக் கதைகளாக்கிய, அவர்தம் திறமை திறம்!"—என்றுபேசி, மகிழ்வர். மகிழ்வதுடன் நில்லார். இந்த நுண்மதி, நமது பண்டையோர் தந்த நிதி! என்று பூரிப்பர். பூரித்ததுடன் நில்லாமல், இது போன்ற கற்பனைத் திறம், மதிவளம், உலகில் வேறு எங்கேனும் உண்டோ!—என்று கேட்பர்!

பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனின் உந்தியினின்றும், கொடியொன்று கிளம்பி, அதன் நுனியிலே தாமரை மலர்ந்து காட்சிதர, அந்த மலரணைமீது நான்முகன் அமர்ந்திருக்க, அவன் நாவிலே சரஸ்வதி வீற்றிருக்க, அவள் கையிலே வீணை இருந்து ஒலிக்க, அதுகேட்டு இன்புற்று நாரதர் கீதம்பாட, அதற்கேற்ப நந்தி மிருதங்கம் கொட்ட, அதுகேட்டு முக்கண்ணன் நடனமாட, ஐயன் ஆடுவது கண்டு, அகிலமெலாம் ஆனந்தக் கூத்தாட, அதன் சூட்சமத்தை விளக்கி சுத்தானந்த பாரதியின் பேனா ஓட, அதனை மதுரகிதமாக்கி வசந்தகோகிலம் பாட,..........இப்படி, இங்கு இன்றும், பிரபஞ்ச உற்பத்திக்கு, என்றோ ஏற்பட்டபழைய கதையைத்தான் பயன் படுத்துகின்றனர். இவ்விதக் கதைகள், நல்லறிவை நையாண்டி செய்யும் நாசவேலையன்றோ என்பதை இந்த நல்லறிவாளர்கள் எண்ணிப் பார்க்காதது மட்டுமல்ல, இவ்விதமான கதைகளுக்கு, உட்பொருள் தேடிக் கண்டறிந்து கூறும் வீண்வேலை செய்து வருவது மட்டுமல்ல, உலகிலேயே, ஏதோ, எவருக்கும் சாத்தியமல்லாத கற்பனையை, இங்கு முன்பு இருந்தோர் கோர்த்தனர், என்று, நம் மக்கள் எண்ணும்படியும் பேசுகின்றனர். அந்தப் பேச்சு, எவ்வளவு அபத்தம் என்பதை எடுத்துக்காட்டவே, ட்யூடன் மக்கள் ஒரு காலத்தில் போற்றிப் புகழ்ந்து வந்த பிரபஞ்ச உற்பத்தியின் புராணத்தைக் குறித்துவிளக்கினோம். கற்பனையைப் பொறுத்தமட்டிலே, ட்யூடன் புராணம், நமது பழையபுராணத்துக்கு மட்டமா? இல்லையே! அந்தப் புராணத்தைநம்பியதிலோ, நம்பிக்கைக்கு ஏற்றபடியான பூஜா காரியங்களை

(17-ம் பக்கம் பார்க்க)

# ★ "தகுதி—திறமை" ★

—❀—

"டே! மடயா! கிடாமாடு! இப்படிவா, இங்கே."

ஆசிரியர், கோபமாகக் கூப்பிடுகிறார். மாணவச்சிறுவன் பயப்படுகிறான். பழய அனுபவம்! தலையிலே குட்டுவதில், அவருக்குத் தனித் திறமை!!

ஆசிரியரின் கோபம், மாணவச் சிறுவனின் அச்சம் இரண்டுக்கும் தக்க காரணம் இருந்தது.

அவரோ, கனிஷ்கர் காலத்திலே, பிரும்மண மதமும் புத்தமார்க்கமும் ஒன்றை ஒன்று விழுங்க எடுத்துக் கொண்ட முயற்சியை விளக்கிக் கொண்டிருந்தார். மாணவனோ, அந்த நேரத்தில்தான், தன் தலையை, மிகமிக வேகமாகக் கீறிக்கொண்டு, பாடத்தைக் கவனியாமல் இருந்தான். பரீட்சைக்கு நிச்சயமாக கேள்வியாக வரக்கூடிய பகுதி, பக்குவமாக அதனைச் சொல்லித் தரும்போது, இந்தப் பாழாய்ப் போனபயல், தலையைச் சொறிந்து கொண்டிருந்தால், ஆசிரியருக்குக் கோபம் வராமலிருக்க முடியுமா! எனவே, அவர், மாணவனை, மடையா! இங்கே வாடா! என்று அதட்டிக்கூப்பிட்டதிலோ, தண்டிக்கத்தீர்மானித்ததிலோ தவறு காண முடியாது!

சிறுவனின் செயல்? அவன்பாடத்தைக் கவனிக்காதது தவறு! மறுக்க முடியாது! ஆனால் குற்றவாளி அவன் அல்ல! அவன் தலையில் இருந்த 'சுண்டு சிரங்கு' உண்மைக் குற்றவாளிகள்!

அவன் ஏழை! தகப்பன் ஓர் தொழிலாளி. தலையில் சரிகைக் குல்லாயும், மல்லிகை வாடையுள்ள எண்ணையுமா இருக்கமுடியும், சுண்டும் சிரங்குந்தான் இருக்கமுடியும்! சிரங்குக்குக் கனிஷ்கரைப்பற்றி என்ன கவலை! சிறுவனைத் தண்டிக்க ஆசிரியருக்குள்ள உரிமையைத்தான் என்ன கண்டது! அதன் உபத்திரவம் அதற்கு! ஈமொய்த்தது! சிரங்கு, சிறுவனை வாட்டிற்று. சிறுவன், ஆசிரியரையும் அவர் போதித்துக் கொண்டிருந்த அரசசபை நிகழ்ச்சியையும் மறந்து, தலையைச் சொறியலானான்! அவனுடைய செயல், கோபமூட்டக்கூடியது—ஆனால் அந்தச் செயலுக்குரிய காரணத்தை விசாரித்தறிந்தாலோ, கோபமல்ல, பரிதாபம் பிறக்கும். ஆனால், இவ்வளவு ஆர அமர, அடிநுனி பார்த்து விசாரித்துக்கொண்டிருக்க நேரம் ஏது, ஆசிரியருக்கு? அவர், கனிஷ்கரைக் கடந்து மளமளவென்று முன்னேறி கிளைவ்வரை வந்துதீரவேண்டும், ஒரு திங்களில்—பரீட்சை நேரம் நெருங்குகிறது. எனவே அவர் கூப்பிட்டார் மாணவனை, வந்தவன் தலையில் ஓங்கிக்குட்டினார். குட்டுவிழுவதற்கும், 'சிரங்கு சிரங்குசார்!' என்று சிறுவன் கூவி அழுவதற்கும் பொருத்தம் சரியாக இருந்தது.

சனியன்! அசுத்தக்குடுக்கை!—என்று கூறிக்கொண்டே, ஆசிரியர், கையைத் துடைத்துக் கொண்டார், காலிகோ மில் தயாரிக்கும் கைகுட்டையாலா? இல்லை, இல்லை அவர் ஆசிரியர், எனவே, போர்டுதுடைக்கத் தரப்பட்டிருந்த நீலத்துண்டிலே துடைத்துக்கொண்டார்.

சிறுவன் அழமுடியும்— பழக்கம் அதிகமாகி விட்டால், அழாமலும் இருக்கமுடியும்—ஆனால் அவனால் உண்மைக் குற்றவாளி தான் அல்ல என்று வாதாடமுடியாது. சிறுவன் என்ற காரணத்தால் மட்டுமல்ல—வறுமை செய்கிற பல அக்கிரமங்களிலே மிகமுக்கியமானது, வாயை அடைத்துவிடுவது!

"ஏண்டா, தலையைச் சொறிந்து கொண்டிருந்தாய்?"

"சிரங்கு சார்!"

"சிரங்கு! சிரங்கா? நீ, குரங்கு! தெரியுமே எனக்கு!"

இவ்வளவுதான், விசாரணை நடைபெற முடியும்.

சுகாதார வகுப்பிலே, அந்த ஆசிரியர், இந்தப் பிரச்னையின் தொடர் கதையைக் கூறுவார். அடிபட்ட சிறுவனுக்காக அல்ல, அவர் நடத்தும் பாடத்துக்காக.

குளிக்காமல், அசுத்தத்தில் புரள்வதாலே, வியர்வையும் புழுதியும் ஒட்டிக்கொண்டு உடலின் மீதுள்ள மயிர்க்கால்களின் துவாரங்களை அடைத்துவிட, பிறகு அங்கு நமைச்சலும், சொறியும் உண்டாகும். நமது நகத்தால், கீறினால், நகத்தின் விஷம், சேர்ந்து, அந்த இடங்களில், சிரங்கு உண்டாகும், என்று சுகாதார ஆசிரியர் கூறிவிட்டு, "அது போக நல்ல சவர்க்காரம் போட்டுத் தேய்த்துக் குளித்துவிட்டுசுத்தமான துணியினால் துடைக்கவேண்டும்" என்றும் சொல்வார்.

சிறுவனின், வீட்டிலே-தண்ணீர் காய்ச்சுவதற்கு உள்ள பானையிலே ஒட்டிக்கொண்டு, போக மறுக்கும், கரிப்படலம், ஆசிரியருக்கு என்ன தெரியும்! அழுக்கில்லாத துணியினாலே துடைக்கச் சொல்கிறார்.! இருந்தால் தானே! சவர்க்காரமாம்! ஒன்பதணா கூலி தகப்பனுக்கு! மூன்று பிள்ளைகள்! சுகாதார வகுப்பிலே, இந்தக் கணக்குக்கு இடமில்லை! அது இந்தியாவின் ஜனத்தொகை பற்றி பூகோள ஆசிரியர் போதிக்கும்போது பேசுவார்!

மாணவர்களின்; மனவளம், அவர்களின் குடும்ப வளத்தையே பெரிதும் பொருத்திருக்கிறது. ஒன்றிரண்டு விதிவிலக்குகள் இருக்கலாம்.

வறுமையினால் வாடிடும் குடும்பங்களிலிருந்து, கல்வி பயிலச் செல்லும் மாணவர்களின் நிலைமை மற்ற எந்த நாட்டையும்விட இங்குதான், மனதை வாட்டக் கூடியதாக இருக்கிறது. எனவேதான், இங்கு, கல்வி போதிக்கும் முறையிலாகட்டும், அதற்குச் சர்க்கார் காட்டும் சலுகைகளில் ஆகட்டும், தகுதி திறமை என்ற, பொது விதியைக்கவனித்தால், அநீதிநேரிட முடியுமே தவிர நீதி நிலைக்க முடியாது. தகுதியும் திறமையும், மாணவர்களிடம் எதிர்பார்க்கும் பள்ளிகளும், அந்தப் பள்ளிகளை நிர்வகிக்கும் சர்க்காரும், ஏழ்மையின் கொடுமையினின்றும் அந்த மாணவர்களின் குடும்பங்களை விடுவிக்கும் தகுதியும் திறமையும் பெறவேண்டும்.

மற்றப்பல காரணங்களைக் கண்டுபிடித்து, மாணவர்களுக்குச் சலுகைகள் காட்டுவதைவிட, மாணவனின் சுறுசுறுப்பு, புத்தி கூர்மை, அடக்கம், பரீட்சையில் பெறும் மார்க்குகள், பள்ளிக்கூடத்துக்கு வரும் ஒழுங்குமுறை, இவைபோன்றவைகளைக் கவனித்து, சலுகைகள் காட்டுவது போதும் என்றிருப்பதைவிட, சிறுவனின் குடும்ப நிலையைக் கவனித்து, சலுகை, உதவி, காட்டுவது

தான், நியாயமாகும், பலனுமளிக்கும்.

"ஹால் கடியாரம் 5 நிமிஷம் ஸ்லோ! அப்பி! புறப்படு! என் ரிஸ்ட் வாட்ச் டைம், ரேடியோ டைம். இதிலே இப்போ சரியா ஒன்பதே முக்கால்" என்று கூறி, மகனைப் பள்ளிக்கூடத்துக்குக் காலந் தவறாமல் அனுப்பிவைக்க ஆடிட்டர் அனந்த கிருஷ்ணரால் முடியும்.

"அலமேலுவீட்டுக்குஓடிப்போயி, ஒருஅரைரூபா கடன்கேட்டு வாங்கிக் கிட்டுவந்து கொடுத்துவிட்டு, பள்ளிக்கூடம் போடா, அழுமூஞ்சி!" என்றுதான், ஆலைத்தோழன், தன் மகனுக்குக் கூற முடியும். அந்த அழுமூஞ்சி பத்து நிமிஷம் 'லேட்'டாக வருகிறான்!

மாணவர்களின், சகல குறைபாடுகளையும், இதுபோலக் கருதி, மன்னித்துவிடவேண்டும் என்பதற்காக அல்ல, இதனை எழுதுவது. பெரும்பாலான தவறுகள், சிறுவர்களின் தனிச் சேஷ்டைகள் அல்ல, அவர்களின் சுற்றுச்சார்பு, சூழ்நிலை என்ற உண்மையை உரைகல்லாகக்கொள்ள வேண்டும் என்பதற்காகக் கூறுகிறோம். மாணவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளக் குறைவு, உணவுவிடுதி வசதி, போன்றவைகளில், சர்க்கார், இந்தச் 'சூழ்நிலையை'க் கண்டறிய முயற்சிக்க வேண்டும்—நீதி நிலைக்க—சமூகம் தழைக்க.

கல்வியில் நாட்டம் பிறக்கவும், அந்த ஆர்வம் வளரவும், சுற்றுச் சார்பைவிடச் சிறந்த ஆசான் வேறு இருக்க முடியாது. சுற்றுச்சார்பு, வறுமையுள்ள இடத்திலே, எப்படி இருக்கும்?

தகப்பனாரின் தொழில், மகனுக்கு ஒரு பாடபுத்தகம்!

சிறுவன் சின்னப்பன், வீட்டிலே, சுத்தியும் சிறு உளியும் இருக்கிறது—சீமான் சுகவனத்தின் குமாரனின் கண்கள், மேஜை மீதுள்ள டைப்—ரைட்டர் மீது செல்கின்றன.

இருசிறுவர்களும் துஷ்டத்தனம் செய்தாலும்—விளைவு வேறு வேறாகவே முடியும்.

சுகவனத்தின், டைப்-ரைட்டரை அவருடைய மகன், கெடுத்துவிட முடியும். சிறுவன் சின்னப்பனின் சிறுவிரலை துண்டிக்கப்பட்டு விடக்கூடும், சிற்றுளியுடன் அவன் விளையாடுகிற காரணத்தால்.

இலேசாகக் கன்னத்தில் ஒருதட்டோடு, தண்டனை முடிந்துவிடும் சுகவனத்தின் வீட்டில்-(பெரும்பாலும்)

சின்னப்பன் முதுகுத்தோல் உரியுமளவு, அங்கு தண்டனை கிடைக்கக் கூடும்.

கட்டேலே போக! சனியனே! எங்காவது தொலைஞ்சு போயேன்!—இந்தக்குரல் சின்னப்பன் வீட்டில்.

இடியட! டர்ட்டிபேலோ!— இது சுகவனம் வீட்டில்.

"ஏம்பா! கூத்து ஆடறாரே குமரசாமி அவருக்கு, வால் எப்படிப்பா ஒட்டவைத்தாங்க" — சின்னப்பன் கேட்பான், அப்பனை, முன்னிரவு பார்த்த லங்காதகன கூத்து பார்த்ததால்.

"ரேடியோவிலே பாடும்போதே, படம்கூட இனித் தெரியுண்டா, பயலே!"

"போப்பா, புளுகு!"

"மண்டு! புளுகுஇல்லெடா!டெலிவிஷன், டெலிவிஷன்னு ஒண்ணு.... ..........." சுகவனத்தின் வீட்டிலே பேச்சு இவ்விதமிருக்கும்.

தகுதியும் திறமையும்கவனித்தால் சர்க்கார், சின்னப்பனை, ஒதுக்கிவிட்டு, சுகவனத்தின் சுந்தரகுமாரனுக்குத்தான் சலுகை,வசதி,காட்ட வேண்டிவரும். அவன்தான் பொது அறிவில் 100-க்கு 80-மார்க்கு வாங்குவான். ஒழுங்காக பள்ளிக்கூடம் வருவதில் 100-க்கு 70 மார்க்குவாங்குவான்—சின்னப்பன், பின் தங்கித்தான்விடுவான்.

சின்னப்பனுக்குத்தான் சர்க்காரின் உதவி தேவை — அவனுடைய வாழ்க்கை ஊனமாகிக்கிடக்கிறது வறுமையால்.

இந்தக்கருத்தை முன்னணிக்குக் கொண்டுவரவேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

தகுதி திறமை என்ற வார்த்தைகளைவீசி, இக்கனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்புமக்களை மேலும் பின்னணிக்குத்தள்ள, நாடாள்வோர் முற்படுவரோ, என்ற அச்சம் ஏற்பட்டுவிட்டது. இங்கு மட்டுமல்ல. மைசூர் சமஸ்தானத்திலிருந்து மனமுருகும் தகவலை ஒரு மாணவத்தோழர் தருகிறார்.

மாணவர்களின் 'தகுதி திறமை' பற்றிப்பேசுபவர்கள், வெட்கத்தால் தலையைத் தொங்கவிட்டுக்கொள்ளக் கூடியவிதமான கேள்விகளைக் கேட்டிருக்கிறார் இந்த மாணவர்.

புத்தி கூர்மையுள்ள பிள்ளைகள் நன்முகப்படித்து முன்னேறுகின்றன. மண்டுகள் சரியாகப் படிப்பதில்லை. தகுதியும் திறமையும் பெற்ற மாணவர்களைத்தானே ஆதரிக்க முடியும் என்று பேசுகிறார்களல்லவா! அவர்களைப்பார்த்து அடிப்படைக்கேள்வி ஒன்று கேட்கிறார் இந்த மாணவர்.

"10 அடி நீளம், 8 அடி அகலமுள்ள வீட்டில், புகை,மூட்டைப்பூச்சி குழந்தைகள் தொந்தரவுடன் எவ்விதத்திலும், எல்லா சௌகரியங்களையும்கொண்ட மேல் ஜாதிப் பிள்ளைகளோடு போட்டியிட்டு, எப்படிப்படிக்கமுடியும்?"

என்ற நெஞ்சுருக்கும் கேள்விக்கு நேர்மையாளர்கள் என்ன பதில்கூற முடியும். அந்த மாணவரின் கடிதத்தை, வெளியிடுகிறோம், மாணவஉள்ளமும் நாட்டு நிலையும் விளங்க வேண்டும் என்பதற்காக. மைசூர் சர்க்கார் மட்டுமல்ல, சென்னை சர்க்காரும் இந்தப் பிரச்னையைக் கவனித்து, சூழ்நிலையால் தாக்குண்டு கிடக்கும் மக்களுக்கே, சர்க்காரின் முதல் உதவி தேவை நியாயம், என்பதை உணர்ந்து ஆவன செய்வர், என்ற நம்பிக்கையுடன்.

அன்புடையீர், இக்கன்னட சாம்ராஜ்யத்தில் இதுபரியந்தம் தமிழ் மாணவர்களுக்கு எல்லாவிதத்திலும் சிறந்த முறையில பல சலுகைகள் கொடுத்திருந்தார்கள். ஆனால்சென்ற வருடத்திலிருந்து(1946-47) தாழ்த்தப் பட்டத் தமிழ் மாணவர்களுக்கு யாதொரு விதமான சலுகைகள் காட்டக் கூடாது, அவர்களெல்லோரும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள், இங்கு இவ்வித அனுகூலங்களைக் கொண்டு படித்துவிடுகிறார்கள். பட்டம் பெறுகிறார்கள். பிறகு அவர்கள் மாகாணத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். மைசூர் இராஜ்யத்திற்கு அவர்களால் யாதொரு நன்மையும் கிடையாது. அவர்களுக்கு ஏன் மைசூர் அரசாங்கம் சலுகைகள் காட்ட வேண்டும் என்று தோழர் ஜெயமுத்துராஜ். M.L.C. என்பவர் கடந்த வருடத்திலிருந்து இதற்குத் தகுந்த முயற்சிகள் செய்து வருகிறார். அவர் Legislative Councilவில் நடக்கும் Scholarship, Freeship, and half Freeship விஷயம் பற்றி பேசுகையில் ஒவ்வொருதாழ்த்தப்பட்ட தமிழ் மாணவனுக்கும் Scholarship and Freeship கொடுக்கக்கூடாது என்று வாதம் செய்து வருகிறார். ஆனால் ஏதோ

ஒரு தமிழர் பிச்சமுத்து என்பார் கருணையால் வாதம் ஜெயமடைந்து வருகிறது. தாழ்த்தப்பட்டத் தமிழனுக்குத் தொண்டு செய்ய எந்த மேதாவியும் இங்கு முன்வரவில்லை. மைசூர் சமஸ்தானத்தின் வருமானத்தில் நாங்கள் பொன்னெடுத்து 1/3 பாகம் மகாராஜாவுக்குக் கொடுக்கிறோம், இப்படி இரத்த வேர்வை நிலத்தில் விழ உழைக்கும் தாழ்த்தப்பட்டவருடைய பிள்ளைக்கு சலுகை காட்ட மறுக்கிறார்கள் மைசூர் அரசாங்கத்திலுள்ள சிலர். இதைக்கவனிக்காவிடில் தமிழர்களுடைய நிலை மோசமாகிவிடும்.

தற்போது ஏற்பட்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சியில் ஒரு சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, இனிமேல் Scholarship, Freeship and Half Freeship,Communial basis சில் இருக்கப்படாதென்றும், Merits and poverty basis சில் இருக்கப்பட வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்; இவ்விஷயத்தைக் குறித்து சென்றமாதம் Non-Bramin Movement ஒன்று ஆரம்பமாயிற்று. மாணவர்களெல்லாம் தங்கள் வகுப்புகளுக்குப் போகாமல் (பிராமணரல்லாதார்) ஊர்வலத்துடன் கோஷமிட்டுக்கொண்டு அட்டாரா கச்சேரிக்குச் சென்றோம். அப்போது கல்விமந்திரி இந்த விஷயத்தை செய்து முடித்துக் கொடுப்பதாகவாக்களித்தார். (அதாவது Communial basisல்கொடுக்க வேண்டும்) அதைப்பற்றி இன்றும் யாதொரு தகவலும்கிடைக்கவில்லை. ஜனவரி மாதத்தில்தான் தெரியவரும். இவைகளுக்கெல்லாம்காரணம் மைசூர் Senateல் மொத்தம் 7 அங்கத்தினர்கள்: அதில் 5 பேர் பிராமணர்கள் 2 பேர் Backward Community யைச் சேர்ந்தவர்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு சௌகரியம் செய்துகொடுக்க ஒருவருக்கும் அதில் இடந்தரவில்லை. மெஜாரிட்டியைச்சேர்ந்த பிராமணர்கள் இல்லாத காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இந்த Senate தீர்மானத்தின் பிரகாரம் யாங்களாகிய எல்லாவிதத்திலும் தாழ்த்தப்பட்டவர்கள், 10 அடி நீளம், 8 அடி அகலமுள்ள வீட்டில் புகை, மூட்டைப் பூச்சி, குழந்தைகள் தொந்தரவுடன் எவ்விதத்தில், எல்லா சௌகரியங்களையும் கொண்ட மேல் ஜாதிப் பிள்ளைகளோடு போட்டியிட்டுப் படிக்கமுடியும்? இதை கவனிக்கையில் எல்லா சௌகரியங்களும் மேல்ஜாதி என்று சொல்லப்படும் மாணவர்களுக்கேசெல்லுகிறதேயொழிய, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இன்றும் தாழ்த்தப்படுகிறார்கள். இந்த குறையோடுகூடஒருதொழிலாளிக்கு 13-அணா அல்லது ரூ 1-1-0 வீதம் நாளொன்றுக்குக்கிடைக்கிறது. இவன் எந்த விதத்தில் தன் பிள்ளைகளை இவ்வித சலுகைகளில்லாமல் மாதம் ரூ, 30 கொடுத்து வெளி ஊர்களுக்கனுப்பி மேல்வகுப்புப் படிக்க ஏற்பாடுகள் செய்ய முடியும்? இவ்விதக் குறைகளைக்கேட்க இந்த மைசூர் சமஸ்தானத்தில் ஒரு தமிழனும் இதுவரைக்கும் முன் வந்ததில்லை. நீங்கள் அறைகூவலைக் கேட்டு மனமிரங்கி இதற்கு வேண்டியஏற்பாடுகள் செய்யவும். இவ்விஷயத்தைப்பற்றித்தெளிவுபட எழுதித் தாங்கள் நடத்திவரும் பத்திரிக்கை வாயலாக மற்றவர்களுக்குத்தெரியப் படுத்தும்படியாகவும், மற்றெல்லா பத்திரிக்கையாளர்களுக்கும் இது விஷயமாகச்சிலகருத்துக்களைவெளிப் படுத்தும்படிக்கும் தங்களை மிகமிகப் பணிவுடன் தாழ்த்தப்பட்ட தமிழ் மாணவர்கள் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன் தாழ்த்தப்பட்டமக்கள் தழைக்கதொண்டு செய்ய மற்றவர்கள் பணியாற்றக் கூடியவர்களை வெளிவர அழைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.'' —

மாணவன்- **பி. அண்ணாமலை.**
மத்யதரக்கல்லூரி, பெங்களூர்.

---

உண்மை தழுவிய கற்பனை

# காதூரர் கருணை

[முடிவுபெறாத சிறுநாடகம்]

காட்சி. 1.

இடம்:- கொஞ்சம் கலனான ஓர் மாளிகை வெளிப்புறம்.

காலம்:—காலை.

உறுப்பினர்:—வாயில் காப்போன் ஒரு சீமான்

மாளிகை கலனாகிஇருக்கிறது. சுற்றுச் சுவர், இருபுறமும் பிளக்கப் பட்டுக்கிடக்கிறது. நெடுநாட்களாக, சுண்ணாம்புஅடிக்காததாலும், பழுதுபார்க்காததாலும், மாளிகையின் வெளித் தோற்றம், கவர்ச்சி அளிப்பதாக இல்லை, வாயிற்படி, தெருத் திண்ணை, இவைகளின் மீதெல்லாம், புழுதியும், கற்களும் நிரம்பியுள்ளன. ஆனால் மாளிகை, பெரிய அளவுடையது. பழுதுபார்த்து, வர்ண வேலைகள் செய்து முடித்தால், அழகாக விளங்கக் கூடியது என்று தெரியும் நிலை இருக்கிறது.

மாளிகையின் முன்வாயிற்படியில், ஒரு காவலாளி களிப்புடன் நிற்கிறான், கையில் சந்தனக் கிண்ணமும், பன்னீர் செம்பும் வைத்துக் கொண்டு. மாவிலைத் தோரணங்கள், வாழைமரம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. ஒருபுறம், முட்செடிகள் உள்ளன.

வீதி வழியாக, ஒரு சீமான் செல்கிறார். பருத்த உடல்! மலர்ந்தமுகம்! எதையும் ஊடுருவுக் காணக்கூடிய கண்கள்! கெம்பீரநடை! மாளிகையை,அலட்சியமாகப் பார்க்கிறார். ஏதோ கீதம் கேட்கிறது உள்ளேயிருந்து.

ஜெய! ஜெய! வந்தே மாதரம்!
ஜெய ஜெய வந்தேமாதரம்!

என்ற கீதம் கேட்டதும், சீமான், மறுபடி, சற்று உன்னிப்பாக, மாளிகையைப் பார்க்கிறார், பெரிய அளவினதாகவும், விழாக் கோலத்துடனும் மாளிகை இருக்கக்கண்டு, மேலும் உன்னிப்பாகப் பார்த்தபடி நிற்கிறார். சீமானின் பார்வை, மாளிகை மீது வீழ்வது கண்ட காவலாளி, முக மலர்ச்சியுடன், வரவேற்கிறான்.

காவ:—நமஸ்தே!

சீமான்:—நமஸ்த்தே............

காவ:—வாருங்கள்!

(வரவேற்றுக்கொண்டே சந்தனம், தருகிறான். அதைத் தொட்டும் தொடாததுமாக)

சீ:—சந்தனக்கட்டை இங்கு ஏராளமாகக் கிடைக்குமோ?

கா:—நிறையக் கிடைக்கும்.

சீ,—இதை இப்படி அறைப்பது தவிர வேறு, என்ன செய்கிறீர்கள்?

கா:—அறைக்கிறோம்—யாராவது பெரியவர்கள் இறந்துவிட்டால், அவர்களை எறிக்கஇதை உபயோகிக்கிறோம்—கொஞ்சம் தைலம்—சோப்பு ..................

சீ:—(பயந்து) தைலம், சோப், செய்கிறீர்களா?

கா:—ஆமாம். கொஞ்சம்—அதிகமல்ல.

சீ:—அதிகமில்லையா? சரி, இந்த மாளிகையை ஏன், ரிப்பேர் செய்யக்கூடாது?

கா:—செய்யவேண்டும். செய்யப் போகிறார்கள். உள்ளே போய்ப் பாருங்கள், அங்கே அதைப்பற்றித்தான் பேசுகிறார்கள்.

சீ:—பேசுகிறார்களா? யார்?

கா:—மாளிகைக்குச் சொந்தக்காரர்கள்!

(சீமான், வேகமாக உள்ளே போகிறார்)

*　*　*

காட்சி. 2.

இடம்:—மாளிகை உட்புற மண்டபம்.

உறுப்பினர்:—மாளிகை வாசிகளின் சிறுகூட்டம்.

ஒருவர் பேசுகிறார்:- எவ்வளவோ கஷ்டப்பட்டு, மாளிகையை நம் வசப்படுத்தி விட்டோம். நமது மாளிகையோ, மிகப் பெரியது .... .... ....

(ஒரு குரல், முழுவதும் கிடைக்காது போய்விட்டதே, என்று கூவுகிறது.)

பேசுபவர்:-பரவாயில்லை. ஒருசிறு தொல்லை! போகட்டும். இந்த மாளிகையை நாம் பெற்ற பெருமையும் சந்தோஷமும் .... .... எவ்வளவு தெரியுமா? இந்தச் சுபதினத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை.

(உள்ளே நுழைந்த சீமான்)

சீ:—உலகமே பாராட்டுகிறது.

பேசு:—நமஸ்தே! உட்காருங்கள்! இவர் போன்ற உத்தமர்களெல்லாம் நமக்குஉற்றதுணையாகஇருப்பார்கள்.

(ஒருகுரல், "யார் இவர்? ஓடிப்போனவனின் ஒன்று விட்ட சகோதரன் போல இருக்கிறான்)

பேசு:—இனி இம்மாதிரி பேசக்கூடாது. நமது மாளிகையை இனி சண்டை சச்சரவுக்குள்ளாக்கக் கூடாது. இவர், .... ....

சீ:—மனிதன்! சர்வதேசத்தான்—மாளிகையின்மகிழ்ச்சியைக் கண்டு மனமாறப் பாராட்ட வந்தவன். மாசற்ற மனமுடையவன், காசூர் என்பது எமது தேசத்தின் பெயர்.

பேசு:—காசூர் கண்ணியருக்கு எமது வணக்கம்.

சீ:—மாளிகையில் மகிழ்ந்துள்ள உமக்கு எனது மகிழ்ச்சியுரை. எம்மாலான உதவியைச் செய்வேன். காசூரின் நோக்கம், மாசுதுடைத்து, எங்கும் மகிழ்ச்சி வளரச் செய்வதுதான். உங்கள் மாளிகை, பிரம்மாண்டமானது-ஆனால் கவர்ச்சி இல்லை-கவர்ச்சிகரமானதாக்க முடியும்-பழுது பார்க்கவேண்டும்—பல வர்ணம் தீட்ட வேண்டும்-சுற்றுச் சுவரைக் கட்ட வேண்டும் .... ....

பே:— ஆமாம், பூந்தோட்டம் அமைக்க வேண்டும் .... ....

சீ:—பழத்தோட்டம் நல்லது.

பே:— பூவிலிருந்து தானே பழம் .... .... ?

சீ:—பழம் தராத பூ உண்டு.

பே:—ஆமாம், ஆமாம்- நல்ல விதமாகத் தோட்டம் அமைக்க ....

சீ:—தக்க திட்டம் வேண்டும்.

(ஒருகுரல், பணம்வேண்டுமே, இவ்வளவு பெரிய மாளிகையைத் திருத்த, ஏராளமாக வேண்டும்.)

பே:— (ஆர்வத்துடன்) பயம் வேண்டாம்! நமது மாளிகையிலே, ஏராளமான பணம், புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இடத்தைக் கண்டு பிடித்து, செல்வத்தை எடுத்து, மாளிகையைச் சீரும் சிறப்புமுள்ளதாக்குவோம்.

(பலர், சபாஷ், பலே! என்று களிப்புடன் கூவுகின்றனர்.)

சீ:— (கனைத்துக்கொண்டு) முடியும். செய்யலாம். ஆனால் ....

பே:— .... செய்ய முடியாது என்ற பதமே எம்மிடம் கிடையாது. இந்த மாளிகையைக் கைப்பற்ற முடிந்தபோது காட்டிய மாவீரம் மங்கிவிடவில்லை.

சீ:—அந்த ஆர்வத்தையும் நம்பிக்கையையும் நான் பாராட்டுகிறேன். ஆனால், புதைந்துள்ள பொருளைக் கண்டுபிடித்து, பிறகு, மாளிகையைத் திருத்துவது என்றால் காலம் அதிகமாகும். அதற்குள் கலைந்த பகுதி மேலும் கலைந்துக் கூடும். காசூர் உதவியைப் பெற்றால், இப்போதே மாளிகையைப் பழுது பார்க்கலாம்.

(ஒரு குரல், காசூர் உதவி, வெள்ளையூர் வேலையாக முடிந்தால் என்ன செய்வது?)

சீ:—பழைய பயத்தை மறந்து, இந்தக் காரியத்தைத் துவக்க வேண்டும்.

(ஒரு குரல், அது எங்களுக்குத் தெரியும்)

சீ:—தெரியாமலென்ன! நீங்கள் மாவீரர்கள்! உங்கள் மூதாதையர், ஞானிகள்! இதோ, பேசுகிறாரே உங்கள் தலைவர், அவர் அஞ்சா நெஞ்சு படைத்தவர். உங்கள் மாளிகையோ, பிரம்மாண்டமானது. ஆஹா! இதை மட்டும், திட்ட மிட்டுக் கட்டி முடித்தால், காண்போர் களிப்புக்கடலில் மூழ்குவர். காசூர், இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதை, ஓர் கைங்கரியமாகக் கருதுகிறது. காசூருக்கு, வெள்ளையூரார்போல, பிறர் மாளிகையிலே புகுந்து கொண்டு, ஆதிக்கம் செலுத்தும் எண்ணமே கிடையாது....................

பே:—அது தான் சிலாக்கியமான கொள்கை. எந்த ஆட்சியும் சொந்த ஆட்சிக்கு ஈடாகாது....................

சீ:—இதையே எங்கள் தலைவர் எழுபத்தி எட்டு தடவை சொல்லியிருக்கிறார். உங்களுடைய மாளிகையை, உங்கள் மாளிகையிலேயே, எங்கெங்கோ புதைக்கப்பட்டுள்ள பொருளைக்கொண்டு, புதிதாக்குவது சிரமம், காலக்கேடு. நீங்கள் விரும்பினால், காசூர், பணம் தரும், ஆட்கள் தரும், பழுது பார்த்து, அழகிய வேலைப்பாடுகள் செய்து முடித்து, அதிலே நீங்கள் குதூகலமாக இருப்பதைக் கண்குளிரக் கண்டுகளிக்கும் நோக்கந்தான் காசூருக்கு...............

பே:—நேர்மையான நோக்கம் நெஞ்சிலே, வஞ்சகமின்றி.

சீ:—வஞ்சகமா! அது பஞ்சைகளின் குணம்! காசூர், நேசர்களின் கொஞ்சுதலைப்பெற, தன்னையே அர்ப்பணிக்குமளவு நல்ல நோக்கம் கொண்டது.

பே:—ஆஹா! மகிழ்ந்தேன்! பூரித்தேன்! இப்படிப்பட்டஉதவி கிடைத்ததற்காக இறைவனை வணங்குகிறேன்.

சீ:—நன்று! நான் சென்று வருகிறேன். காசூர் சென்று, மாசுமருவற்ற உமது மனத்தை எடுத்துக்கூறி, இந்த மாளிகை பழுது பார்க்கும் மகத்தான கைங்கரியத்தை, தெய்வகாரியமாக மேற் கொள்ளும்படி, வற்புறுத்திக் கூறுவேன்.

பே:— மெத்த சந்தோஷம் ஜெயவிஜயீபவ!

(15-ம் பக்கத்தில்)

# கேள்வியும் :: :: பதிலும்

**1. கல்லூரிமாணவர்கள், பகுத்தறிவு இயக்கத்துக்கு, எந்தவகையில் பணியாற்ற முடியும்.**

கட்சிமாச்சிரியங்களை மறந்து, பகுத்தறிவு பரவவேண்டும் என்ற ஒரு நோக்கத்துக்காகக்கூடி, நமது நாட்டுமக்களின் வாழ்க்கையிலே ஊறிப்போயுள்ள பழைய, பயனற்ற, கேடுதரும், எண்ணங்களை, அகற்றும்வகையிலேபேசுவது, பாடுபடுவது ஓவியங்கள் தீட்டுவது, பொருட்காட்சிகள் நடத்துவது, நாடகங்கள் நடத்துவது, விஞ்ஞானிகள், வீரர்கள், அறிஞர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளை எடுத்துக் கதைவடிவில் கூறுவது, உலகிலே, எங்கெங்கு, என்னென்ன வகையான மூடநம்பிக்கைகள் இருந்து வந்தன, அவைகள், எப்படி அகற்றப்பட்டன, என்பனவற்றைவிளக்குவது—இவ்விதமாகப் பணியாற்றலாம்—பலன் உண்டு. கூடுமானவரையில், நடைமுறை அரசியல் பூசல்களிலிருந்து ஒதுங்கியிருந்து, நடத்துவதே, நல்லது. பெரியநகர்களிலே நடத்தப்படுவதைவிட, கிராமங்களில் இந்தப் பிரசாரம் நடைபெறவேண்டும். எழுச்சி யூட்டும்சொற்பொழிவு விழாக்களாக மட்டுமே அமையாமல் மக்கள் மனதிலே பதியக்கூடிய விதமான உரையாடல்களாக அமைவது நல்லது.

**2. கம்பன் கவிதைகளிலே காமரசம் அதிகம் என்று கண்டித்து எழுதிவிட்டு, ரோமாபுரி ராணிகள் என்ற புத்தகத்தில் காமரசத்தைக் கலக்கியது சரியா?**

சரியல்ல, கலக்கிஇருந்தால்! காமரசக் களஞ்சியம், அந்த அரசிகளின் வாழ்க்கை. அதன்பயனாக அரசு அழிந்தது என்பதை முன்னுரையில் கூறிவிட்டு, வெறும் போகபோக்கியத்தில் மிருக இயல்புடன் புரள்வோர் நாடாள்வோராக இருக்கக்கூடாது என்று எச்சரிக்கவே இப்புத்தகம் தீட்டுகிறேன் என்பதை விளக்கினேன். எனவே, காமரசத்தைக் கலக்கிய குற்றம்என்பாலில்லை, அதுபோலவே, அந்த ரசத்தைப் போற்றிய தாகவோ, பாராட்டுவதாகவோ, அதனை முன்மாதிரியாகக் கொள்ளவேண்டு மென்று 'சிபார்சு' செய்வதாகவோ, என்மீது குற்றம் சுமத்தக்காரணம் இல்லை. குற்றம் ஏதேனும் சுமத்தலாம் என்று தேடிடும்போது, இதுமட்டுமா, இன்னும் உருவற்ற, பலனற்ற, பலகிடைக்கும். தேவையுள்ளோர் அந்தத்திருப்பணியில் தாராளமாக ஈடுபடட்டும். நிற்க, ரோமாபுரிராணிகள், கம்பன் ஏடுபோல, கடவுள் கதை அல்ல, பஜனை ஏடல்ல! புண்யகதையாகவும்! பிறவிப் பெருங்கடலைக் கடக்க உதவும்பெரும் துணையாகவும், பெருமானின் பொருளைப் பெற்றுத்தரவல்ல புனித ஏடாகவும், கூறப்படும், இராமகாதையிலே, ஏன், காமரசம் கலக்கினர் கம்பர், என்பது என் கேள்வி? அந்தக் கேள்வியும் கண்டனமும், நான் 'ரோமாபுரி ராணிகள்' வெளியிட்டதால் பயனற்றுப் போய்விடாது. பழிகூறு படலத்துக்குப் பரபரப்புடன் சிலபல தேடுவோர், என்மீது பழுதையை வீசிவிட்டு, பாம்பை வீசிவிட்டோம் என்று களிப்பதிலே, எனக்கோர் நஷ்டமும் இல்லை. அவர்கள் ஆசையும் தீர்ந்து போகட்டுமே, நமக்கென்ன நஷ்டம், என்ற கைவல்ய வாக்கியந்தான் கவனத்திற்கு வருகிறது.

**3. வெள்ளையரிடமிருந்துவிடுதலை பெற்றுகிவிட்டதே, இனியும் நீங்கள் விடுதலைப்போர் என்று பேசித் திரிவது என்?**

விடுதலைப்போரின் ஒரு கட்டமே, வெள்ளையர் விரட்டுபடலம். போர் முடிந்துவிட்டதாகப் பொருளில்லை. அன்னிய ஆட்சி நீங்கியதும், நல்லாட்சி நிறுவப் போரிடவேண்டி ஏற்படுகிறது. அதுவே, உண்மையான விடுதலைப் போர். அந்தப்போர் நடத்துவதே எமது நோக்கம்.

விடுதலைப் போர், வெள்ளையரை ஓட்டுவதோடு முடிந்துவிடுவது என்று கருதுபவர், நாம் குறிப்பிடும், நல்லாட்சி அமைப்புக்கான போர் சரியானதென்றோ, வீரம் செறிந்ததென்றோ எண்ணமாட்டார்கள்—கலந்துகொள்ளவும் விரும்பார். அலுப்பும சலிப்பும் காரணமாக இருக்கக்கூடும்.

விடுதலைப் போராட்டத்தின் ஒரு கட்டத்தில் ஒத்துழைத்தவர்கள், அடுத்த கட்டத்திற்கு உடன்வர ஒப்பினும் ஒப்புவர். அன்றி முதற்கட்டத்திலேயேசோர்ந்துபோயினும் போவர். அல்லது அவரின் லட்சியம் அதுதான் எனத் திருப்திகொண்டு, மேலும் செல்ல விழைவோரை மடக்கும் அரும்பணியிலும் ஈடுபட முனையினும் முனைவர். இக்கட்டத்தில் உண்டாகும் எதிர்ப்பு முன்னிலும் பலம் நிறைந்ததாகும். ஏனெனில், ஒருமுறையான சமூக அமைப்பில் ஆதிக்கம் பெற்றுள்ள சிலர், தங்கள் ஆதிக்கம் என்றும் அழிவுபடாத முறையில் செயலாற்றுவதைக் கண்டு, அந்த முறை பலனற்றது என்பதை உணர்ந்து, விரிவான பலன் தரும் வேறோர் அமைப்பை நிலை நாட்டுவதில் நாட்டங்கொண்டுள்ளோர், ஏற்படுத்தியுள்ள முறையால் அதிகப்படியான மக்களின் அல்லல் தீர்க்கப்படாததின் காரணமாகவும், அத்துடன் மேலும் மேலும் அவ்வல்லல் அதிகரிப்பதின் காரணத்தாலும், முன் குறித்த ஆதிக்கக்காரர்கள்மீது, அவதிப்படும் மக்களை ஏவிவிடுவது, முழு அளவிற்கு முடியவில்லையாயினும் ஓரளவிற்காவது முடிகிறது. ஆனால் இரண்டாம் கட்டத்தில் ஆதிக்கக்காரர்களின் பிடியிலிருந்த மக்களை மீட்கப் போராடியவர்களே — விடுதலை விரும்பிகளே — கஷ்ட நஷ்டம் பட்டவர்களே — ஆதிக்கத்தில் அமர்ந்துவிடுவதால், அவர்களுக்கு எதிராக, அனைவரும் இன்பவாழ்வு பெறுவதற்கான விலங்கொடிக்கும் விடுதலைப் பணியில் மக்களைத் திரட்டுவது, முன்னிலும் கஷ்டமானதாக இருக்கிறது. இருந்தாலும் முடிந்த வெற்றி மக்களுக்கே. காலந்தான் கொஞ்சம் கூடுதலாகும்.

**4. வாழ்க்கை, எப்படி இருக்க வேண்டும், என்று பகுத்தறிவுவாதிகளாகிய நீங்கள் கருதுகிறீர்கள்?**

மாயப்பிரபஞ்சம்-நீர்மேற் குமிழி என்பனபோன்ற கருத்துகளை விரும்பாத பகுத்தறிவாளர்கள், வாழ்க்கையைப்பற்றிக்கொண்டுள்ள கருத்து, வெறும் மிருக இச்சை பூர்த்திதான் என்ற தப்புப்பிரசாரம் பரவி இருக்கும் இந்நாளில், இந்தக்கேள்வி கேட்கப்பட்டதுபற்றி மிக மகிழ்ச்சி—உண்மையை விளக்க ஓர் வாய்ப்பு ஏற்படுவதால்.

இவ்வுலகில், உயிரோடு இருப்பது மட்டுமல்ல வாழ்க்கை—கல்விகேள்விகளில் சிறந்து, மக்களை மக்களாக

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 11—12—47 [ஞாயிறு

# ஒன்றும் செய்யவில்லை!

✲

'புகைகுடிக்கக் கூடாது' எனும் விளம்பரப் பலகை பல இடங்களில் தொங்கவிடப் பட்டிருப்பதைப்பார்க்கிறோம். சிறுதீப்பொறி பட்டாலும், தீப்பிடித்துக்கொள்ளும் பண்டம் அங்கு இருக்கிறது எனும் உண்மையை உணர்த்துவதற்கே, முன் அறிவிப்பாக அத்தகைய பலகை தொங்கவிடப்பட்டிருக்கிறது. இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமலோ, கவனியாமலோ, நடந்து கொண்டால் அபாயம் ஏற்படுவது நிச்சயம்.

*

'தொடாதே, அபாயம்' எனும் விளம்பரத்தையும் பார்த்திருக்கிறோம். இதனால், மனிதனால் தொடப்படும் பொருளுக்குப் பெரும்பாலும் அழிவு உண்டாவதில்லை. ஆனால் தொடுகிறவர்களுக்குச் சிலசமயங்களில் உயிர் போகும் அளவிற்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். எனவே, முன் அறிவிப்பு அவசியப்படுகிறது.

* * *

'அசுத்தம் செய்யாதே' எனும் விளம்பரங்கள் சந்து பொந்துகளிலெல்லாம், நகரங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. அசுத்தமே வியாதிகளுக்குக் காரணம். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாமல், அசுத்தம் செய்வதால், அதன் விளைவாகத் தோன்றும் பல உயிர்கொல்லும் கிருமிகளால், அப்பகுதியிலுள்ள மக்களுக்குப் புதிய புதிய நோய்கள் சம்பவிக்க இடமேற்படுகிறது. எனவே, இதுவிஷயத்திலும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

* * *

நல்வாழ்வு பெறுவதில் மக்களுக்குப் போதிய ஆர்வமின்மை, சீர்கேடான செல்வநிலை, கல்வியற்ற கேவலம் முதலியன மக்களைச் செம்மையான முறையில் நடக்கவிடவில்லை. இந்தமுறை மாற வேண்டும். மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

மனித வாழ்க்கைக்கு, இதுவரையில் நாம் கொண்டிருந்த பொருளை மாற்றிப் புதுப் பொருள் கொள்ள வேண்டும். கண்ணுக்குப் புலனாகும் இவ்வுலக வாழ்வில் மக்களுக்கு நம்பிக்கைஏற்பட வேண்டும். அதற்கான வகையில், நாட்டு மக்கள் நலத்தில் நோக்குடையவர்கள் தொண்டாற்ற வேண்டும்.

அபாய அறிவிப்புகளைக் கண்டு, கவலையற்று இருப்போர் உண்டு.

வேறுசிலர் உண்டு, அசுத்தம் செய்யாதே! என்ற போர்டுகள் உள்ள இடமாகப்பார்த்து, அசுத்தம் செய்பவர்கள். இத்தகையவர்களை அறிவுள்ளோர் என்றோ, பொறுப்பை உணர்ந்தவர்களென்றோ, அறிஞர்கள் கூறார்.

அமைச்சர்கள், அறிவுள்ளவர்கள்! ஆளும்திறம் படைத்தவர்கள்! கண்ணியம் காரணமாக அவர்கள், பொதுக் கூட்டங்களிலே, நாங்கள் மக்களின் ஊழியர்கள் என்று பேசுவர், உண்மையிலேயோ, அவர்கள் நாட்டு மக்களை நடத்திச் செல்லும் நாயகர்கள்.

மந்திரி டேனியல்தாமஸ், மதிமிக்கவர் என்பது மட்டுமல்ல, அனுபவசாலி!

அப்படிப்பட்டவர், கண்முன் ஓர் அபாய அறிவிப்புப்போர்டுதென்பட்டது—அவரே அதுபற்றிக் கூறவும் செய்தார். ஆனால், அவரே, அதுபற்றி யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

அந்தப் பருநிதான் ஆச்சரியமிகுந்ததடி!—என்ற கவியின் வாக்கு, கவனத்திற்கு வருகிறது.

"சென்னையில், தெருக்களிலும் சாக்கடை ஓரங்களிலும் சுமார் ஒரு இலட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள்!"

நாகரிகம், நல்லாட்சி, நல்லறிவு, நன்மதக் கோட்பாடு, மனிதாபிமானம், முதலிய எந்தப் பண்பாட்டின்படி கவனித்தாலும், இந்த நிலை, அபாய அறிவிப்பு என்பது மறுக்க [illegible] தபடி விளக்கமாகும்.

அமைச்சர் டேனியல் தாமசின் அரசியல் கட்சியினர் அருஞ்சிறையிலிருந்து கொண்டு, ஆங்கிலக்கொடி, கோட்டையில் பறந்துகொண்டு, உலகுக்கு இந்தியாவின் இழிநிலையை எடுத்துக்காட்டி வளனம் செய்து கொண்டிருந்தனரே, அந்தநாளிலும், சாக்கடை ஓரங்களில் ஏழைகள், விடுதிகள் அமைத்துக்கொண்டுதான் இருந்தனர், விடுதி! வேதனையின் வடிவம்!! தகரப்பலகை, அதிலே பல பொத்தல்! அது வளைத்து ஒருபுறம் நிறுத்தப்பட்டிருக்கும். மறைப்பிலே, சட்டியும் பானையும் இருக்கும்—நெருப்பு இருக்கும்போது நாய் இராது—நாயும் ஏழையின் சிறு சேயும், அந்தச் சமையலறையைச் சயன கிரஹமாகக் கொள்ளும், நெருப்பில்லா நேரங்களில்! இது அவர்கள் விடுதி! இதிலே, ஆண் உண்டு பெண் உண்டு, 'ஆண்டவன் அருளால்' அரைடஜன் குழந்தை குட்டிகள் உண்டு!

கொடி கீழே இறக்கப்பட்டு, சிறைக்கோட்டத்திருந்தோர் நாடாள்வோராகி விட்டனர். ஆனால் அந்த விடுதிகள், அப்படியே உள்ளன!! அமைச்சரே அறிவிக்கிறார்! அன்பு மார்க்கத்தவர் டேனியல்தாமஸ். அவர் அறியவில்லை, இந்த ஏழைகளின் அவதியை, என்ற அளவிலே நிலைமை இருந்தால், வருத்தம், மட்டுமே நமக்கு ஏற்பட்டிருக்கும். அவர் அறிந்திருக்கிறார்! அறிவித்துமிருக்கிறார். ஒரு இலட்சம்மக்கள்சாக்கடை ஓரத்தில் உள்ளனர் என்று!

மனிதனின் இறுதி லட்சியம் எதுவாக இருந்த போதிலும், இன்று சமுக வாழ்வில் உள்ள குறைபாடுகளை நீக்க வழிவகை செய்யக்கூடா

## பொங்கல் வாழ்த்துக் கார்டுகள்

தமிழர் திருநாளாகிய பொங்கலுக்காகப் பொங்கல் வாழ்த்துக் கார்டுகள், ("கிருஸ்மஸ் கார்டுகள்" போன்று), திராவிடத் தந்தை பெரியாரின் படத்துடனும், புரட்சிக் கவிஞரின் பாட்டுடனும், மிகச் சிறந்த முறையில், தயார் செய்யப்பட்டுள்ளன.

தனிக் கார்டு 1-க்கு ரூ 0-4-0

100 கார்டுகள் ரூ 24-0-0

வேண்டுவோர் உடனே கீழ்க் கண்ட முகவரிக்கு முன்பணத்துடன் எழுதவும்.

சிவப்பிரகாசம்

39. வேளாளர் வீதி,

வேப்பேரி, சென்னை.

தென்பதில்லை. இன்றுபலர் பசித்திருக்கவும், சிலரிடை உணவுப் பொருள் குவிந்து கிடக்கவுமான நிலையைப் பார்க்கிறோம். மாட மாளிகையில் சிலர் சுக வாழ்வில் வாழவும், பலர் சாக்கடை ஓரங்களையும் வெட்ட வெளிகளையும் தங்கள் குடியிருப்புகளாகக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். இந்த நிலை சென்னையில் இருப்பதாகவும், சரியான புள்ளி வுவரம் சேகரிக்கப்படவில்லை யென்றும், சுமார் ஒரு லட்சம் மக்கள் தெருக்களிலும் சாக்கடையோரங்களிலும் வசிக்கிறார்கள் என்றும், சென்னை சட்டசபையில்கனம்மந்திரி டேனியல்தாமஸ் குறிப்பிட்டுள்ளார்.

வேதனை தரும் விஷயம் இது. சென்னையில் மட்டும் இந்த நிலை என்று சொல்லமுடியாது. பொதுவாகச் சகலநகரங்களிலும் இந்த நிலைதான். கோவை, மதுரை போன்ற இடங்கள், சென்னையை மீறினும் மீறக்கூடும். இதற்கு ஏதாவது பரிகாரம் உண்டா? இதற்கான திட்டம் ஏதாவது இதுவரையில் தீட்டப்பட்டுள்ளதா?

"இந்த ஏழைகள் வசிப்பதற்கு இதுவரையில் சர்க்கார் ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை.

இவ்வாறு கூறிவிட்டார், பதிலாக மந்திரியார். அவருக்குப் பெயர் வீட்டிலாக்கா மந்திரி. பெயருக்கு ஏற்பச் செயலிருக்கவில்லை.

மாகாண சர்க்கார்தான் இதனைச் செய்யவில்லை. ஆனால் சென்னை நகரைப் பரிபாலிக்கும், சீமான்களாவது இந்த அபலைகளின் அவஸ்தையைப் போக்கத் தக்கதோர் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்களா? அவர்களுக்குத்தான் எவ்வளவோ வேலை இருக்கிறதே, எவ்வளவு பேருக்கு வரவேற்பு அளிக்கவேண்டி இருக்கிறது—எத்தனைப்பேர்களுக்கு சஷ்டியப்த பூர்த்தி கொண்டாட வேண்டி இருக்கிறது—இது போன்ற 'சத்காரியங்களிலே' அவர்கள் கவனம் எல்லாம் சென்றிருக்கும் பொழுது, ஏழை எளியவர்கள் எக்கேடுகெட்டால்தான் என்ன! எங்கு குடியிருந்தால்தான் என்ன—எப்படி அவஸ்தைப்பட்டால்தான் என்ன—இவைகளை எல்லாம் கவனிக்க அவர்களுக்கு நேரமேது?

விடுதலை அடைந்துவிட்டதன் அறிகுறியாக, அவர்கள் எவ்வளவு வேலை செய்யவேண்டி இருக்கிறது. தெருக்களுக்கெல்லாம் புதுப் புது பெயர்கள் மாற்றவேண்டும் — பேட்டைகளுக்கெல்லாம் வேறு நாமஞ் சூட்ட வேண்டும் — இதுபோன்ற எவ்வளவோ உடனடியாகச் செய்யவேண்டிய வேலைகள், அவர்களுக்குக் காத்துக்கொண்டிருக்க, அவர்களுடைய கவனம் பாதையிலே முகாமிட்டிருக்கும் — ஒதுக்குப்புறத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் — ஏழைகள் மீது எப்படிச் செல்லும்?

சென்னை கார்ப்பொரேஷன் கனதனவான்களின் கருத்தையும் — வேலைத் தொந்தரவையும் தெரிந்து கொள்ளாமல், அவர்கள் ஏன் இந்த ஏழைகளின் குடியிருப்பைக் கவனித்துக் கொள்ளக்கூடாதென, தோழர் ஆதித்தன், அதே சட்டசபையில் அதே மந்திரியாரை ஒரு கேள்வி கேட்டார். அதில்,கார்ப்பொரேஷன் செய்யும் வரவேற்பையும் விழாவையும் இடித்துக் கூறினார். இதற்கு, பொருத்தமற்ற கேள்வி என மந்திரியார் பதில் கூறிவிட்டார்.

இது,உடனடியாகக்கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்று சொல்லத் தேவைஇல்லை. குடிஇருக்க இடமில்லாமல், தெருக்களிலும், ஒதுக்குப் புறங்களிலும் மக்கள் அவதிப்படுவது, அவர்களை மட்டும் பாதிக்கக் கூடியதன்று. பங்களா வாசிகளையும் இது தாக்கும். இருக்கவும் படுக்கவுமே இடமின்றி அவதிப்படும் ஏழைகள், அசுத்தத்தைக் கழிக்க ஒதுக்கிடங்களுக்கு எங்கே போவார்கள்? அவர்களே சுகக்கேடான இடங்களில் தங்கி உயிரோடு இருக்கிறார்களே!

அவர்களைப் பிடிக்கும் நோய், சுகபோகிகளையும் தாக்கவே தாக்கும். சுற்றுப்புறங்களை நச்சுக் கிருமிகள் பிறந்துவளரும் பண்ணையாக வைத்துக்கொண்டு, பாதுகாப்பான பங்களாவில் வாசம் செய்து, நச்சுக் கிருமிகளைக் கொல்லும பற்பல நவீன பொருள்களை உபயோகித்துக் கொண்டு, வாழ்ந்துவந்த போதிலும், என்றைக்காவது ஒரு நாளைக்கு, பங்களாவும் தொத்துநோய்ப்பண்ணையாக மாறியே தீரும்.

சுகவாழ்வுக்கு பங்கம் விளைவிக்கும் சுற்றுச் சார்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அதன் அபாய விளைவிலிருந்து தப்பிப் பிழைக்க மருந்து தேடிக்கொண்டிருப்பது, விரும்பக் கூடிய முறையாகாது. பொது மக்கள் வரிப்பணம் பாழாவதும், தொத்து நோய் அறவே அழிக்கப்படாமல் இருப்பதும், மக்கள் அதனால் பாதிக்கப்படுவதும்தான் பலனாக முடியும்.

சென்னை சர்க்காரோ, கார்ப்பொரேஷனோ, இந்த அபாய நிலையிலிருந்து சென்னை மக்களை மீட்க உடனடியாக முயலவேண்டும். புதிய வீடுகள் கட்ட முன்வர வேண்டும். இந்த நல்ல காரியத்தில் செலவு செய்வதற்கு இல்லாத பணம் வேறு எதற்கு என்பதுதான் விளங்கவில்லை!

சென்ற போரின் விளைவாக, இங்கிலாந்தில் லட்சக் கணக்கில் வீடுகள் நாசமாய்விட்டன. அங்கு, வீடு கட்டுவதற்கே முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் வீடு அற்றோர், அங்கு சில பொது இடங்களை ஆக்ரமித்துக் கொண்டதாகவும் செய்தி வந்தது.

சென்னை சர்க்காரின், செயலகங்கள் பல வாடகைக் கட்டிடங்களில் இருப்பதாகவும், அதற்கான புதிய கட்டிடங்களைச் சொந்தத்தில் சென்னை சர்க்கார் கட்டப்போவதாகவும் சிலநாளைக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. பின்னர், கட்டிடத்திற்கான சாமான் விலை அதிகமாக இருப்பதின் காரணமாக, அந்த யோசனை கைவிடப்பட்டுவிட்டதாகவும் செய்தி வந்தது. சர்க்காரின் சொந்த நிலைக்கே, இந்தப்போக்கு. ஆனால், ஏழைகளுக்கு வீடு கட்டுவதில் புதிய நிலை ஒன்றும் ஏற்பட்டு விடப்போவதில்லை.

இங்கிலாந்தில் இருப்பதும் சுதந்திர சர்க்கார்தான், இங்கு இருப்பதும் சுதந்திர சர்க்கார்தான். இருந்தாலும்—இங்கு சர்க்கார் கட்டிடங்களுக்கே சலுக்கை கிடையாது; பலம் பொருந்திய மத்திய சர்க்காருக்கு ஆக்கம் தேடுவதில் ஊக்கம் குறையக்காணோம்!

இன்று சென்னையிலிருக்கும் கோவில்கள், ஒரு லட்சம் அல்ல, மேலும் பலரை குடியிருக்க ஏற்றுக் கொள்ளும் அமைப்பில்தான் இருக்கின்றன. தெருக்களிலும் ஒதுக்குப் புறங்களிலும் தங்கி இருப்பவர்கள் நாஸ்திர்களும் அல்ல. அவர்கள் அனைவரும் ஆண்டவன் குழந்தைகள். சிலருக்குவிரிந்த மனமும், அதிகாரத்திலிருபவர்களுக்குக் கொஞ்சம் துணி

வும் இருந்தால் ஏழைகள் குடியிருப்புக் கஷ்டத்துக்கும் ஓரே நிமிஷத்தில் நல்லதோர் முடிவு காணலாம். நடக்குமா?

ஏழைகள் இவ்வாறு இடமின்றி அவதிப்படுவது, மக்களின் சுகவாழ்விற்கு வர இருக்கும் கேட்டைத் தெரிவிக்கும், அபாய அறிவிப்பாகும். இதனைக் கவனித்துத் தக்கமுறையில், ஆதிக்கத்திலுள்ளோர் நடந்துகொள்ளவேண்டும். இல்லையானால், விடுதலைப் போராட்டம் புதுருபத்தைப்பெறுவது இயற்கையாகும்.

✱

9-ம் பக்கத் தொடர்ச்சி

மதித்து நடந்து, சோம்பித்திரியாது சுறுசுறுப்பாக உழைத்து, செல்வத்தைப்பெருக்கி, தேவைக்கேற்ற அளவு பெற்று, இன்பம் பயக்கும் பல சாதனங்களையும் கண்டு வாழ்வதுதான்—மனித வாழ்வின் முடிந்த லட்சியம் என்பதை நாம் ஒவ்வொருவரும் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். இந்த உயர்ந்த வாழ்வு நினைத்த மாத்திரத்தில், நினைப்புக்கொள்வதால் மட்டும் சித்தியாகிவிடாது. எடுத்து விளக்குவது முக்கிய மாயினும், வெறும் விளக்க உரையால்மட்டும் சாத்தியமாகக் கூடியதன்று. இந்த லட்சியத்தைப் பெறுவதற்காக நம்மில்பலரின் சுகபோகங்களைக்-கிடைத்தற்கரிய உயிர்களைப் பணயம் வைக்கவேண்டும்.

ஒரே நாளில் வெற்றி பெற்றுவிடக்கூடியதுமன்று. இந்த இன்ப வாழ்வைப் பெறமுடியாமல், மனிதனின் அறிவையும் முயற்சியையும் குலைப்பதற்கு, அவனுக்குப் பூட்டப்பட்டுள்ள விலங்குகளோ அனந்தம். வன்மைமிக்கது. ஒவ்வொன்றாகத்தான் நொருக்கமுடியும். ஒருவிலங்கு ஒடிந்ததும், எதிர்பார்த்த லட்சியம் கூடவில்லையேயென மனச்சோர்வு ஏற்படுவது இயல்பு. அந்த மனச்சோர்வுக்கு இடங்கொடாமல் மேலும் மேலும் விலங்கொடிக்கும் வேலையில், முன்னினும் முழுமுரமாகப் பங்குகொள்ளவேண்டும். இத்தகைய பணி எதிர்பார்த்ததைக் காட்டிலும், குறுகிய கால அளவில் முடிவுற்றாலும் முடியலாம்—நாள் கூடினாலும் கூடலாம், எதற்கும் இப்போராட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள சக்தி-எதிர் சக்தியின் பலத்தைப் பொறுத்திருக்கிறது.

வாழ்க்கை இன்பம், சிலருக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய அவ்வளவு பொருட்பஞ்சம் பூமியில் இல்லை. அறிவுப்பஞ்சம் கூட அல்ல, இன்றுள்ள அவதிக்குக் காரணம். தன்னலம், பிறர் நலத்துடன் பிணைந்திருக்கிறது என்ற பேருண்மையை உணராததாலேயே, சுரண்டல் முறை வளருகிறது, அதன் விளைவாக, பெருபாலோர் வாழ்வு தேய்கிறது. தேயும் வாழ்வினருக்கு, எதையேனும் கூறித் திருப்தியைத் திணிக்க விரும்பும் தத்துவார்த்திகள் கிளம்பி, வாழ்க்கை வானவில் போன்றது, பொம்மலாட்டம், என்று சிலபல கூறி, வாழ்க்கையின் அடிப்படை உண்மையை மறைக்கின்றனர்.

●

P. ஷண்முகம் & Co.
மருந்து ஷாப்
106. ராஜ வீதி,
பெரிய காஞ்சிபுரம்.

எங்களிடம் எல்லாவிதமான இங்கிலிஷ் மருந்துகளும் விலை சரசமாய் மதராஸ் விலைக்கே கிடைக்கும்.
குறிப்பு:—
C. N. அண்ணாத்துரை M. A., அவர்கள் எழுதிய எல்லாப்புத்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

‘புது வாழ்வு’
(மாத வெளியீடு)
ஆசிரியர்:- க. அன்பழகன் எம்.ஏ.
துணையாசிரியர்:- இராதாமணாளன்
முதல் இதழ் 14—1—48
பொங்கலன்று
கட்டண விவரம்:—

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் விலை அணா | 4 | 5 |
| ஆண்டுக்கட்டணம் ரூபா | 3 | 4 |

விற்பனையாளர் தேவை. முன்பணம் கட்டக்கூடியவர்கள் உடனே எழுதுக.
விவரங்கட்கு:—
நிர்வாகி, புதுவாழ்வு நிலையம்,
10. வேளாளர் தெரு, புரசைபாக்கம்,
சென்னை.

## விருந்துரை

“திராவிட நாடு” அலுவலகம், திருக்கச்சிநம்பி தெருவில் 95-ம் எண்ணுள்ள இல்லத்தில், அமைக்கப்பட்டதை முன்னிட்டு, அலுவலகத்தில், 14—12—47 தேனீர் விருந்தளிக்கப்பட்டது. உள்ளூர் நண்பர்களும், தோழர்கள், நெடுஞ்செழியன், இளஞ்செழியன், செழியன், அன்பழகன், வேலாயுதம் ஆகிய பல வெளியூர் நண்பர்களும் வந்திருந்தனர். பிறகு நடைபெற்ற மகிழ்வுரைக் கூட்டத்திற்குத் தோழர் அ. க. தங்கவேலர், தலைமை வகித்துப் பேசினர். தோழர் அண்ணாத்துரை நன்றி கூறினர்.

## மறைந்தார்

காஞ்சிபுரம் ‘குமரன்’ அச்சக உரிமையாளர், தோழர் த. குப்புசாமி அவர்கள் 17-12-47ல் உயிர் நீத்தார். அச்சுத் தொழிலைப், பிறர் கண்டு ஆச்சரியப்படும்படி முன்னணிக்குக் கொண்டுவந்தவர். விடாமுயற்சி உடையவர். சிறிய இயந்திர சாதனத்தைக் கொண்டே ஞானசூரியன், இராமாயண ஆராய்ச்சி போன்ற நூற்களை அழகுபட உருவாக்கியவர், ‘குமார விகடன்’ எனும் இதழையும் சிலகாலம் வெளியிட்டு வந்தார். அவருடைய ‘திருக்குறள்’ நூல் புகாத தமிழர் இல்லங்களே இல்லை என்று கூறலாம், அவருடைய தொழில் திறமைக்கு,‘குமாரவிகடன்’ தேதிக்குறிப்பொன்றே தக்கதோர்சான்றாகும். அவருடைய குடும்பத்தார்க்கு நமது ஆறுதல்.

காஞ்சிபுரத்தில்

சகல விதமான பத்திரங்களும், பிராதுகள் முதலிய விண்ணப்பங்களும் குறைந்த செலவில், தமிழிலெழுதவும், ஆங்கிலத்தில் டைப் அடிக்கவும்படும்.

C. B. தண்டாயுதபாணி
Ex: அவில் தார்கிளார்க், ஆர்.ஐ.எ.எஸ்.சி.
20-B, மதங்கீஸ்வரன் கோவில் தெரு,
காஞ்சிபுரம்.

# "காயமே, இது, பொய்யடா கருத்து வெல்லுது, மெய்யடா!"

●—●

"இது ஒரு புதிய கோஷமய்யா! ஏதோ ஒரு சூட்சமத்தைக் கண்டு பிடித்து விட்டவர்கள் போலப் பேசுகிறார்கள், வடநாட்டான் ஆதிக்கம் என்று. வடநாடாவது—தென்னாடாவது. இப்படி எல்லாம் பேதபுத்தி கூடாது. இதுகள், ஏதேனும் இப்படிப் பேசிக்கொண்டேதான் கிடக்கும். தள்ளுங்க, சார்! யார் கேட்கப் போகிறார்கள், இதுகளின் கூச்சலை—கதறலை."

சிரமமின்றிக், கூறிவிட முடிகிறது இதுபோல.

சிலருக்கு, இந்தச் சொல் வீச்சு மட்டும் போதுமென்று தோன்றுவதில்லை—கல் வீச்சிலும் ஈடுபடுகின்றனர்.

வீசும் கல்லும், ஏசலும், உடலையும் உள்ளத்தையும் தைக்காமலில்லை. என்றாலும், அந்த வேதனை எதனால் குறைகிறது? எங்கிருந்து கிடைக்கிறது, மன வலியையும் மாற்றும் மருந்து? இதனை வேறு கட்சியிலுள்ள, நண்பர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. ஒரு சிறு கதை—பழைய கதைதான்—ஆனால் புதிய பாடம் கிடைக்கும். இதோ, அது.

ஆஸ்தானவித்வானொருவன், மகா ஆணவக்காரன் — காரணம், தன் கீதத்தின் மூலம், கல்லையும் உருகச் செய்தவன்.

பல நாட்டு ஆஸ்தான வித்வான்களும் கூடி இருந்தனர், கோயில் மண்டபத்தில். அவன் பாடினான். பலரும் வியந்தனர். அவன், கெம்பீரக் குரலில் சொன்னான், "கோயிலின் மூலவரைச் சென்று பாருங்கள்" என்று. சென்று பார்த்தனர்—சிலையின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பொழிந்து கொண்டிருக்கக் கண்டனர்—அவன் காலடி வீழ்ந்து, "கல்லையும் உருகச் செய்த கலாவாணர் நீர்—உமது கால்தூசும் எமக்குப் பரிசு!" என்று கூறிப் போயினர். பன்னெடு நாட்கள், இந்த வித்வான், பட்டத்தரசர்களும் பயப்படும் அளவுக்குப்புகழ்பெற்றுச் செல்வாக்குடன் வாழ்ந்து வந்தான். ஆணவம் அதிகரித்தது.

இரு சகோதரர்கள், சிற்றூர் வாசிகள்.

ஒருவன் சிற்பி, மற்றவன் இசை வாணன்.

புகழ் பெறாதவர்கள். பல நாடுகளிலும் சென்றுவிட்டு, ஆணவ மிக்க வித்வானின் ஊர்வந்தனர்.

அரச அவை சென்றனர், பாடி ஏதேனும் பரிசுபெற. ஆஸ்தான வித்வான், பாடவந்தவனை ஏற இறங்கப் பார்த்தான்.

"யார் முன் நிற்கிறீர் என்பதை அறிவீரோ?" என்று கேட்டான்.

"நான் இசை பயின்றவன், இராகு கேது தெரிந்தவனல்லவே!" என்று விடை அளித்தான் இளம் பாடகன்.

"ஏடா, மூடா! விகடமோடா பேசுகிறாய். யாருடைய முன்னிலையில்! கல் உருகக் கானம் பாடிடும் வித்வான், நான்" என்றான்.

"கல்லை உருகச் செய்தீரோ? நான் அறியேன்! நான் கல் மனம் கொண்டோரையும் உருகும்படி மட்டுமே பாடவல்லேன்" என்றான்.

வழக்கப்படி கோயிலிலே கூடினர். ஆஸ்தான வித்வான் பாடினான்—சிலை, கண்ணீர் பொழிந்தது. சிற்பி சிரித்தான்—இசைவாணன், "என்னால் இது ஆகாது. ஆனால்........" என்று கூறிவிட்டுப் பாடலானான், சோகமிக்க ஓர் பாடலை. சபையிலே, அனைவரும், ஆணவ மிக்க வித்வான் உள்பட, அழலாயினர். சிலை மட்டும் கண்ணீர் பொழியவில்லை.

"அண்ணா! சிலையும் அழவேண்டுமோ?" என்று கேட்டான் சிற்பம் தெரிந்த தம்பி.

"அழட்டுமே! சிந்தையிலே செருக்குக்கொண்ட இவனே அழும் போது..........." என்றான் இசை வாணன்.

சிற்பி, "சிலை, முன்போல அழாது" என்று கூறிச் சிரித்தான். சபையோர், வித்வானைப் பார்த்தனர். மன்னன், பாடச் சொன்னான். வித்வான், பாடிப் பாடிப் பார்த்தான்—சிலையின் கண்களிலே நீர் கசியவுமில்லை. சிற்பி பிறகு கூறினான், சிலையின் கண்களில் நீர் பொழியும் வித்தை சிலைக்கு அருகே அமைத்து வைத்துள்ள ஓர் நீர்ப் பொறியால் தான் என்பதை — அந்தச் சூட்சமத்தை, ஆஸ்தான வித்வானும் அர்ச்சகனும் சேர்ந்து கையாண்டதை—அதைத்தான் கண்டறிந்து, நீர்ப்பொறியை அடைத்ததை—இவைகளைக் கூறியதோடு, மன்னரைக் கொண்டே பரீட்சிக்கவும் செய்தான். வித்வானும் தன் தவறை ஒப்புக்கொண்டான்.

இந்தப் பழங்கதை போல, நமது மாற்றுக் கட்சித் தோழர்கள், எத்தனையோ அற்புதங்களைச் செய்பவர்கள்—அவர்களின் பேச்சுக்கு உலகமே மதிப்பளிக்கும் — தேர்தல் அவர்கள் காட்டும் திக்கு நோக்கித் தாண்டவமாடும் — எல்லாம் சரி— ஆனால், அவை போன்ற அற்புதங்களைச் செய்யும் சக்தியற்ற நம்மால், ஒன்று செய்ய முடிகிறது — நாம் எண்ணுவதையும் கூறுவதையும், அவர்கள் எண்ணும்படியும் கூறும் படியும் செய்ய முடிகிறது! கல்லை உருகச் செய்த வித்வானையே, உருகச் செய்த ஊர் பேர் தெரியாத இசைவாணன் போல.

இந்த நம்பிக்கைதான், நொந்த நமது உள்ளத்துக்குத் தக்க மருந்தாக அமைந்து, உற்சாகமூட்டுவதுடன், நமது வேலை பலனளிக்காமல் போகாது என்று உறுதி பிறக்கச் செய்கிறது.

வடநாடு — தென்னாடு என்னும், பேதம் பேசாதே என்று கூறும் நண்பர்கள், கொஞ்சம், திடுக்கிடாமல் படிக்கவேண்டும், இதை ஒட்டி வெளிவரும் விஷயத்தை.

"சுயராஜ்யம் வந்துவிட்டது! சுயராஜ்யம் முழுதும் வராமல் கொஞ்சந்தான் வந்திருக்கிறது; வடக்கேதான் வந்திருக்கிறதே தவிர இங்கே வரவில்லை." இப்படி பெல்லாப் பலர் பேசும்படி நமக்கு சுயராஜ்யம் வந்துவிட்டது. இந்த அதிர்ச்சியில் ஏற்படும் குழப்பங்கள் பலவாக

இருக்கின்றன. வெள்ளைக்காரர்பிடுங்கலும் ஆதிக்கமும் தொலைந்தன. ஆனால் பதிலுக்கு வடநாட்டார் தென்னாட்டை வளைத்துக்கொண்டு விட்டனர்என்றகூக்குரல் செவிடுபடுகிறது. வடநாட்டான் யார்? அவனும் நம்முடைய சகோதரனல்லவா? என்று பதில் கூறப்படுவதை நாம் கேட்கிறோம். வெள்ளைக்காரன் புலிகரடியின் இனத்தைச் சேர்ந்தவனல்ல. நம்முடைய ஒன்றுவிட்ட மனித சகோதரன்தான். ஆனாலும் அவன் செய்த அநியாயம் பொறுக்க முடியவில்லை, போகச்சொன்னோம். வடநாட்டு சகோதரன் கழுகு மாதிரி காரியம் நடத்த ஆரம்பித்தால் நாம் செய்வதென்ன? சென்னையைப் பார்க்கலாம். ஒரு இருபது ஆண்டுகட்கு முன்பு சென்னை தமிழர்களின் சென்னையாக இருந்தது. இப்பொழுது தலைப்பு மாறியிருக்கிறது. தெலுங்கர் ஏதோ சமீப எல்லையை உத்தேசித்து 'மனதே' வழக்குக்கோலுகிறார்கள். ஆனால் அங்கே பேராதிக்கம் வகிப்பது வடநாட்டார் என்பதை உணரவேண்டும். வடநாட்டு வியாபாரிகள் உள்பகுதியிலுள்ள சிறுபட்டினங்களிலும் புகுந்து வியாபாரத் துறையில் ஆதிக்கம் பெற்று வருகின்றனர். வடநாட்டுப் பாங்கிகள் பல வேரூன்றியிருக்கின்றன. வடநாட்டார் கம்பனிகளில் நம்முடைய மூலதனம் குவிந்திருக்கிறது. சென்னை மார்க்கட்டுக்கு இறகு கிடையாது. பம்பாய் மார்க்கெட்டும், கல்கத்தா மார்க்கெட்டும் சென்னை மாகாணத்தின் குரல்வளையில் கைவைத்துக் கொண்டிருக்கின்றன வென்றால் அது மிகைப்பட்ட செய்தியல்ல.

"இதையெண்ணிப்பார்க்கும்போது தென்னாடு தனிப்பட வேண்டுமென்று அன்பர் பலர் விரும்புகின்றனர். இந்த இயக்கம் நாட்டில் அரும்பி எழுகின்றது. இந்த வடநாட்டுப் பிடியிலிருந்து கழலுவதற்குத் தென்னாட்டு சமஷ்டி தேவை என்பதொருவாதம்."

விடுதலையா? அல்ல! திராவிடக் கழக ஏடுகளிலே எதேனும் ஒன்றா? அல்ல.

காங்கிரஸ் ஏடு! ஆமாம்! அதிலும் காந்தீயத்தைத் தனவணிகர் நாட்டிலே பரப்பும் கைங்கரியத்தைச் செய்யும் காரைக்குடி, குமரன்!

எழுதிய தலையங்கம், இது.

ஒருபுறம், இப்படி, நமது கருத்து ஊடுருவி மாற்றுக் கட்சியின் ஏடுகள் வாயிலாகவே, நாட்டு மக்களுக்குப் பரவும்போது, நம்மீது வீசப்படும் கல், உண்டாகும் தழும்புகள், சிறப்புச்சின்னங்களாகத்தானே, நாம் கருதவேண்டும்!

வடநாட்டின் ஆதிக்கம்வளருவது உண்மை என்பதை காங்கிரஸ் ஏடு, எடுத்துக்காட்டும்போது, எதிர்க் கட்சி வக்கீல், நமக்குச் சாதகமாகக் கூடிய மிகமுக்கியமான குறிப்புத் தரும்போது, களிப்புமட்டுமல்ல, பெருமையுமன்றோ ஏற்படுகிறது. களிப்பும் பெருமையும் கூடக்கிடக்கட்டும் ஒருபுறம்—காரியம் பலிக்க வழி பிறக்கிறதே, அதைக்கவனித்தால் எவ்வளவு உறுதியும் நம்பிக்கையும் ஏற்படுகிறது.

பொருளாதாரத்துறையிலே, வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது — 'குமரன்' வாசகப்படி, "குரல்வளையில் கைவைத்துக்கொண்டிருக்கிறது"—

இந்த உண்மையை காங்கிரஸ் ஏடு ஒப்புக்கொள்வதற்கு, நாம் கொடுக்கும் விலைதான்— கல்லடிபட்டதும், சொல்லடி கேட்பதும். கிடைத்திருக்கும் பொருளின் மதிப்பைப்பார்க்கும்போது, கொடுத்திருக்கும் விலை கொஞ்சந்தான்! பாதையில் கல் இடறிக் கீழே வீழ்ந்தாலும் தான், காயம் ஏற்படுகிறது. கண்ணியத்தை மறந்த புண்யவான்கள், வீசும் கல்லும், அதேகாரியத்தைச் செய்கிறது. ஆனால், கருத்து எங்கெங்கே பரவுகிறது, என்பதைக் கவனிக்கும்போதுதான் 'காயமே' இதுபொய்யடா என்று ஆனந்தக்களிப்பு பாடத் தோன்றுகிறது. காயமே என்பது வேதாந்த வாசகப்படி உடலைக்குறிப்பது—நாம் இங்கு உடலில் ஏற்படும் காயத்தைக் குறிப்பிட்டோம்.

'குமரன்' காங்கிரஸ் ஏடு என்றாலும், அது மாஜிசுயமரியாதைக்காரரால் நடத்தப்படுவது, எனவே, அதிலே திராவிடவாடை வீசிற்று என்று வாதிடலாமா என்று தோன்றும்,கல்வீசும்நண்பர்களுக்கு.

அந்த வாதம் பயனற்றது. இதோ வேறோர் ஏடு கூறுவது.

"சுப்பிரமண்ய பாரதியார்இருந்த காலத்தில் தான் வடநாட்டில் ரவீந்திரநாத் தாகூர், இக்பால் இருவரும் இருந்தார்கள். அவ்விருவர்களும் அகில இந்தியக் கவிகளானார்கள். பாரதியார் தமிழ் நாட்டின் தேசியக் கவியாகப் போற்றப்படுவதற்கே 'ததிங்கணத்தோம்' தாளம் போட வேண்டியதாகிவிட்டது. ஏன்? தமிழரின் சுய அபிமானமற்ற நிர்குண நிர்தோஷ சுபாவமே காரணம்.

"யதீன்தாஸ் பட்டினி கிடந்து இறந்தார். அதைக் குறித்துக் குறைவாக மதிக்கவில்லை. அவருக்குத் தலைவணங்கி, அவர் தாள்களைநம்சென்னிமேல் தாங்கவேண்டும். ஆனால், அதே சமயத்தில் திருச்சியில் வாஜபேயர் இறந்தார். அவருடைய ஒரு நேத்திரம் அழுகிஉதிர்ந்தது. உயிர்போகும்போது ராஜாஜியைத் தரிசிக்க விரும்பினார். ராஜாஜிசென்றார். தியாகி கைகூப்பினார். புன்முறுவல் செய்தார். விடைபெற்றார். உயிர் நீத்தார். கடைசிவரை 'மன்னிப்பு' என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும். விடுதலை செய்கிறோம் என்று சர்க்கார் மன்றாடினார்கள். வீரன் மனம் தளரவில்லை. அப்படிப் பட்டவரின் புகழ்தமிழ் நாட்டிலும் அலையோதிப் பரவவில்லையென்றால் வடநாட்டில் எங்கே தலைகாட்டப் போகிறது!

"பம்பாய் நகரத்தில்பாபுகனுலாரி சக்கரத்தினடியில் சிக்குண்டு மாண்டார். திருப்பூரில் குமரன் மண்டை உடைந்து மாய்ந்தார். குமரன்பெயர் அகில இந்தியாவில் அடிபடுகிறதா? இல்லை. ஏன்? முன் சொன்ன காரணம் தான். தமிழர்களுக்கு சுய அபிமானமற்ற நிர்குண நிர்தோஷமனோபாவ இருப்பதனால் தான்! இம்மாதிரியான சம்பவங்கள் ஒன்று இரண்டல்ல. பல சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், என்ன பிரயோஜனம்? தமிழர்களின் பிறவிக்குணம் மாறுமா? அது பிறவிக்குணமாக இருந்தால் மாறாது தான். உண்மையில் அது பிறவிக் குணமல்ல. வெகுகாலமாக அடிமைப் பட்டிருந்த காரணத்தினால்ஏற்பட்ட குணம். ஆகவே, முயற்சி செய்தால் அந்தக்குணம் மாறிவிடக்கூடும்."

குமரன், பொருளாதாரத் துறையிலே, வடநாடு செலுத்தும் ஆதிக்கத்தைக் குறிப்பிட்டு எழுதியது.

இந்த வாசகம், தமிழ் நாட்டு வீரர்கள் தியாகிகள்கூட, வடநாட்டிலே மதிக்கப்படுவதில்லையே, வடநாட்டுத் தலைவர்களுக்குத்தானே, இங்குள்ளோரும் சேர்ந்து, சாமரம் வீசுகிறார்கள், என்ற விசாரத்தை வெளியிடுகிறது.

இரண்டையும் கூட்டிப்பாருங்கள்.

தமிழன் மதிப்பிழந்திருக்கிறன்—செல்வத்தை இழந்து நிற்கிறன்.

பொருளும் இல்லை, புகழும் இல்லை.

வெட்கமும் துக்கமும் சேர்ந்து தாக்கும் நிலை அல்லவா இது! பொருளும் புகழும் வடநாட்டு ஆதிக்கக்காரர்களிடம் போய்ச் சேர்ந்துவிட்டது, என்பது, இந்த இரு ஏடுகளின் உரையினின்றும் விளக்கமாக்கப்படுகிறது. மறந்தேனே, சொல்ல! புகழ்பற்றிய செய்தி மாஜி, க. ம. வின் ஏடுமல்ல, திராவிடரின் பேனு ஓடும் ஏடுமல்ல, நாராயண ஐயங்காரின் பேனுவால் நடைபெறும், இந்துஸ்தான் எனும் காங்கிரஸ் ஏட்டில் இருப்பது.

இப்படி, இரு காங்கிரஸ் ஏடுகள், இடைவிடாது நாம் செய்து வரும் பிரசாரத்திலே பொதிந்துள்ள அடிப்படையை, அறிந்தோ அறியாமலோ, ஏற்றுக்கொள்ளும்போது, நமக்கு வெற்றிக் களிப்பு வரத்தானே செய்யும்.

இங்கு மட்டுமல்ல இந்தஉணர்ச்சி. எங்கும் பரவி இருக்கிறது. வடநாட்டு ஆதிக்கம் தலைவிரித்தாடுவது மட்டுமல்ல, ஆதிக்கக்காரர்கள், தமிழர்களிடம் அலட்சியமாகவும் நடந்து கொள்கின்றனர். வடநாட்டு காங்கிரஸ் தலைவர்களின் விழாக்களைக் கொண்டாடுவது போல, விமரிசையாகத்தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களின் விழாக்களைக் கொண்டாடுவதில்லை, என்ற பேச்சு, காங்கிரஸ் வட்டாரத்திலே, கிளம்பி இருக்கிறது-தொலைவில் உள்ள மலாயாவில். அங்கு நடைபெற்ற வ. உ. சி. விழாவில் மலாய் நாட்டுக் காங்கிரஸ் கட்சி தக்கவிதம் நடந்துகொள்ளவில்லை என்று, மனம் வருந்தி, கோலாலம்பூர், 'ஜனநாயகம்' எனும் தினத்தாள் 27—11—47-ல் தீட்டியிருக்கிறது.

"மலாயாவிலுள்ள இந்தியர்களின் ஏகஸ்தாபனமாக விளங்கும் மலாயா இந்தியர் காங்கிரஸ் வடநாட்டுத்தலைவர்களின் விழாக்களை மட்டும் உற்சாகமாகக்கொண்டாடிவிட்டுத்தமிழ்நாட்டு வீரத்தியாகிகளான பாரதி, வ. உ. சி., வீரவிளக்கு வ. வே. சு. அய்யர், நாட்டின் மணிக்கொடிக்காக உயிர்துறந்த திருப்பூர் குமரன் போன்ற தியாகிகளின் தினங்களைக் கொண்டாடுவதில் அக்கறை செலுத்துவதில்லை யென்ற அபவாதமேற்பட்டுளது.

"குறிப்பாக இந்நாட்டில் வதியும் இந்தியர்களில் 100-க்கு 90 சதவிகிதம் தமிழ் மக்களென்பதை மறந்துவிடக்கூடாது. எனவே தமிழ்நாட்டுத் தியாகிகளின் தினங்களை மலாயா இந்தியர் காங்கிரஸ் கொண்டாட முயற்சி எடுத்துக் கொள்ளாதிருப்பதற்குத் தகுந்த முகாந்திரமிருக்க முடியாது.

"கோலாலம்பூரில் நடைபெற்ற வ. உ. சி. நினைவுநாள் கொண்டாட்டத்துக்கு 64 இந்தியர்களின் ஸ்தாபனங்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தும், 18-ஸ்தாபனங்கள் மட்டும் பங்கெடுத்துக் கொண்டன வென்பதை அறிய நாம் வருந்தாதிருக்க முடியவில்லை.

"வ. உ. சி. அவர்களின் நினைவு நாள் கொண்டாட்டத்தில் ம. இ. காங்கிரஸ் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன? ஒன்றுமில்லை என்று கூறி வருந்துவதைத் தவிர வேறெதுவும் செய்வதற்கில்லை, இதைத் தமிழர்கள் சிந்திப்பார்களானல் அவர்களுடைய மனம் புண்படாதிருக்க முடியுமா?"

இவை, அந்தத் தலையங்கத்திலே உள்ள வாசகங்கள்.

இதுமட்டுமா! சின்னுட்களுக்கு முன்பு, திருநெல்வேலிப் பகுதியிலே, வைத்தியர்கள் மாநாடு நடைபெற்றது. அதிலே சென்னை சுகாதார மந்திரி, கனம் ஷெட்டி கலந்து கொண்டார். அவர் பேசும்போது, இந்திய சர்க்கார், வைத்தியத்துறையிலே, விசேஷ மேல்படிப்புப் பெற, 5 வைத்தியர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. இந்த ஐவரில், ஒருவர் கூட, சென்னை மாகாணத்தவரல்ல என்று கூறிவிட்டு 'இதற்காக நான் வருந்துகிறேன்' என்று பேசியிருக்கிறார்.

'குமரன்', குமுறுகிறது, இந்துஸ்தான் இடித்துரைக்கிறது, ஜனநாயகம் சஞ்சலப்படுகிறது அமைச்சர். வருந்துகிறர், வடநாட்டு ஆதிக்கத்தின் ஒவ்வோர் பகுதிகளைத் துண்டு துண்டாகக் கூறியும், விளைவுகள் பற்றி விசாரத்தோடு பேசியும்.

நம்மீது வீசப்படும் கற்களைவிட, இவர்கள் வீசும், 'கருத்துகள்' உள்ளனவே, அவை, நமது கவனத்தைக் கவர்ந்து, அஞ்சாதே! உன் கருத்துப் பரவுகிறது! என்ற உறுதியை ஊட்டுகிறது.

## காசூரர் கருணை

8-ம் பக்கத் தொடர்ச்சி

சீ:— சந்தேகம்வேண்டாம். எதற்கு; காசூருக்கு, உதவி கோரி, இங்கிருந்து யாரையாவது அனுப்பி வைத்தால்...........

பே:— ஆஹா! செய்வோம்! பாபாஜீ!

பாபா:— இதோ, கிளம்புகிறேன்.

(சீமான் விடைபெற்றுக் கொள்கிருர்.)

### காட்சி 3.

இடம்:— காசூர்.

உறுப்பினர்:— கோடீஸ்வரர்கள்.

ஒரு கோடீஸ்வரர், கடிதமொன்றைப் பிரித்துப் படித்துவிட்டு, புன்சிரிப்புடன், அதை, மற்றவரிடம் தருகிறர். சுமார் அறுபது பேர் கூடியிருக்கிறர்கள் அங்கு. ஒவ்வொருவராக கடிதத்தைப் படித்து, மகிழ்கிறர்கள்.

ஒரு கோடீ:— தூதர்...........

இன். கோ:— சாமர்த்தியசாலி!

வேறு கோ:— அனுபவசாலி!

ஒரு கோ:— பக்குவமாகக் காரியத்தை முடித்திருக்கிறர்.

வேறு கோ:— பழைய மாளிகையைப் புதிதாக்கும் உதவி செய்வதென்றால், அவர்களுக்கு உச்சி குளிர்ந்துதானே போகும்.

ஒரு கோ:— நன்றாகக் குளிரட்டும்! பழய மாளிகையைப் 'புதிதாக்கப் பண உதவி செய்யும்போது மாளிகை, அடமானமாக வைத்தாக வேண்டுமே! பிறகு, கடனைப் பைசல் செய்து, மீட்டுக் கொள்வதைப் பார்த்துக்கொள்வோம்.

வேறு கோ:— தவறு, உமது திட்டம். பண உதவி செய்யும்போதே அடமானப் பத்திரம் எழுதச் சொல்லக்கூடாது. விழிப்பும், பயமும் பிறந்துவிடும். பணம், ஏறின பிறகு, பத்திரம் தயாரிக்க வேண்டும்.

மற். கோ:— அதுதான் சரியான யோசனை. வரட்டுமே, போன ஆசாமி.

### காட்சி 4.

இடம்:— மாளிகை வாசல்

உறுப்பினர்:— பேசினேர், பிணியாள்.

பிணியாள்:— ஆமாம், என்னமோ, மாளிகையின் பேருக்குத் கடன் வாங்கப் போவதாக........

பே:— எவன் கலக மூட்டினுன்?

பி:— கலகமா! சேதி சொன்னுன்.

பே:— சேதி, முழு உண்மையல்ல. பணம் வாங்கப் போகிறோம், ரிப்பேர் செலவுக்கு. ஆனல் அது கடன் அல்ல, உதவித் தொகை.

பி:— உதவித் தொகையா?

பே:— உனக்குச் சூட்சமம் புரியாது, போ.

பி:— புரியத்தான் இல்லே. அன்னியர்கள், ஏதேனும் சாக்குக் கூறிக் கொண்டு, உள்ளே நுழைவார்கள்—பிறகு தங்கள் ஆதிக்கத்தைப் புகுத்துவார்கள், என்றெல்லாம், முன்பு....

பே :— சொன்னேன். ஆமாம். அது பழைய கதை. மறந்துவிடு.

பி:— மறக்க முடியவில்லேயே! உதவித் தொகை தருவதாகக் காசூரான் சொல்கிறுன், இப்போது. பிறகு, மாளிகை அவன் வசம் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறதே.

பே:— சுத்த பயந்தாங் கொள்ளி! போமய்யா, எனக்கு நேரமில்லே, உன்னிடம் வம்பளக்க.

* * *

(நாடகம் முடிவு பெறவில்லே.)

மாளிகை—இந்தியா.

பேசுபவர்—காங்கிரஸ் கட்சி சீமான்—கிரேடி.

காசூர்—அமெரிக்கா.

பிணியாள்—ஏழை.

* * *

நாடகத்தின் பொருள் இப்போது விளக்கமாகும் என்று நம்புகிறேம்.

இப்படி மனம் போன போக்கிலே, ஒரு நாடகம் தீட்டுவதா, என்று கோபிக்கத் தோன்றும், அன்பர்களுக்கு.

இந்திய விடுதலே விழாவிலிருந்து, அமெரிக்கா நாட்டுத் தூதுவர், ஹென்ரி கிரேடி இந்தியாவிடம் காட்டிவரும் 'அக்கரை' அனேவரும் அறிந்த விஷயம். அதை ஆதாரமாக வைத்துஇந்நாடகம் தீட்டபபட்டது. போதாது என்கிறீர்களா? சரி! இதோ, மேலும் இரண்டு ஆதாரங்கள்.

கிரேடி பேசியிருக்கிறுர், சின்னுட்களுக்கு முன்பு, "வெளிநாடுகளிலிருந்து, மூலதனம் உதவி பெருமல் கூட நீங்கள், நாட்டை அபிவிருத்தி செய்துகொள்ள முடியும்—ஆனல் மூலதனம் ஏராளமாக ஏற்கனவே உள்ள நாடுகளின் உதவியைப் பெருவிட்டால், உங்கள் நாட்டு அபிவிருத்தி, தாமதப்படும். தக்க நிபந்தனேகளுடனும், சரியான நிலேமையிலும், பலர் பணம் கடன் கொடுக்கத் தயாராக உள்ளனர், என்பதை, என்நாட்டு முதலாளிமார்கள் சார்பாக நான் கூறமுடியும். ஆனல், இந்த நாட்டிலேயோ, வேறு நாட்டிலேயோ சென்று, எங்களிடம் கடன் வாங்கிக் கொள்ளுங்கள் என்று கெஞ்சமாட்டோம்."

அதற்கு ஒத்து ஊதும் முறையில் சாகல் சங்ஷா., எனும் வடநாட்டு வணிகத்தலேவர்

"வெளிநாட்டு தொழிலாசர்கள், இங்கு, பெரிய தொழிற்சாலேகளே எல்லாம் சில வருஷங்களுக்குள் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்று பயப்படுகிறுர்கள், சந்தேகிக்கிறுர்கள்—இந்தியசர்க்கார், உடனடியாக இந்த பயத்தையும் சந்தேகத்தையும்போக்க வேண்டும்." என்று பேசினுர். நாடகம், தவரு!

20-ம் பக்கத் தொடர்ச்சி

யும் கூட வேண்டுவதில்லே. அதற்குள் அவன் நிலே அடியோடு மாற்றம் அடையவேண்டும்.


இனி வெறும் ஆழஉழுத நிலமும், ரசாயன எருக்களும் மட்டும் நிலத்தை வளமாக்க முடியாது. அதிகமாக நீர்ப்பாய்ச்சப் படவேண்டும், அணேகள், நீர்வீழ்ச்சிகள், டெல்டா பகுதிகள் (Delta) இவைகளின் அண்மையிலிருக்கும் நிலங்கள்தான் சர்க்காரால் அதிகமாகக் கவனிக்கப்படவேண்டும். மழையற்ற காலத்தில் தேக்கங்கள் (Reservoirs) கண்மாய்கள் கட்டி, இவற்றிலிருந்து நீர்ப்பாய்ச்ச வேண்டும். மேல் நாடுகளில் மழைபெய்யாத காலத்தில், விமானங்களில் அமோனியாவையும் (Ammonia Gas) பனிக்கட்டிகளேயும் சேகரித்து, மேகங்கள்மீது கொட்டி மழைபெய்விக்கிறுர்கள். நாமோ ஏற்றம் இறைத்தும், கவலே அடித்தும் நெற்றி வியர்வை நிலத்தில்விழ பாடுபட வேண்டும்!

உழைப்புக் குறையவேண்டுமானல் மின்சார டைனமோக்கள் (Dianamos) உபயோகப்படுத்தி, குளங்களிலிருந்தும், ஏரிகளிலிருந்தும் ஊற்றுகளிலிருந்தும் மேல்இழுத்து நீரைப் பாய்ச்சவேண்டும். இந்த முறையை அபிவிருத்தி செய்யத் தெந்தலூர் (Dendalur) பகுதியில் ரூ 70,000 அதிகப்படுத்தியிருக்கிறுர்கள். சராசரி நெல் அதிகமாகப் பயிரிடும் இடங்கள் மிகுதியாகக் கவனிக்கப்படவேண்டும்.

இம்முறைகளால் பயிர்செய்தல் ஒரு விவசாயிக்கு 100 ஏக்கரா நிலத்திற்கு 500 ரூபாய் செலவாகிறதென்றும், அறுவடையான பிறகு 5,333 ரூபாய் வருமானம் வருகிறதென்றும் ஆராய்ச்சி செய்தார்கள். எனவே குறைவுக்கும், இல்லாமைக்கும் வழியே இல்லாமற் போகிறது.

விவசாயிநிலே ஓங்கவேண்டுமானல் ஐந்து விஷயங்கள் முக்கியமாகத் தெரியவேண்டும். ஒன்று கூட்டுறவுப் பண்ணே ஏற்படுத்தல், இரண்டு அதிகமாககால்வாய்கள் வெட்டுதல், மூன்ருவது காடுகளே அழித்துப்பயிர்செய்தல், நான்காவது உயர்ந்தவிதைகளேயும், ரசாயன எருக்களேயும், இயந்திர சாமான்களேயும் உற்பத்தி செய்தல்—கடைசியாக நம் நாட்டுக் கால்நடைகளேப் பாதுகாத்தல்.

இம்முறைகளேக் கையாண்டு பழைய, உழைப்பு மிகுந்த சாதனங்களேத் தவிர்த்தால் நிச்சயமாக நம் நாடு உயர்ந்த நிலேயை அடையும். அப்பொழுதுதான் உழுதுண்டு வாழ்வாரே வாழ்பவராவார்கள்.



## ரயிலேறி ராமேஸ்வரம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

அமைத்துக் கொண்டதிலோ நமது மக்களுக்கு, ட்யூடன் மக்கள், எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல! நாரதரின் பக்கத்திலிருந்து தாளம்போட்டுக்கொண்டே கீதம் கேட்டவர்கள்போல இங்கு பழைமைவிரும்பிகள்பேசுவது போலவே, ட்யூடன்மக்களும், ஆதும்லாவின்மடியிலிருந்து ஒழுகியபாலைப் பருகியவர்கள் போலவே பேசிக்கொண்டிருந்தனர். ஆலயம் அமைப்பது, ஆறுகால பூஜை செய்வது, பூஜாரிக் கூட்டத்தின் பேச்சை தேவனின் வாக்கெனக் கொள்வது, சந்தேகிப்போரை, சித்ரவதை செய்வது, எதிர்ப்போரைக் கொல்வது, போன்ற எந்தத் திருக்கலியாண குணத்திலும், இங்கு இன்றுள்ள நமதுபழைமை விரும்பிகளுக்கு எள்ளளவும் குறைந்தவர்களல்ல, அந்நாள் ட்யூடன் மக்கள்!

ஆனால் அங்கு இப்போது, அந்தக் கதையை நம்புவோர் கிடையாது. இங்கு இன்றும் அதே போன்ற கதையை நம்ப மறுப்போர், நாஸ்தீகர்கள்!

ஒருகாலத்தில், யெமரின்மண்டை ஓடு, வானம், என்று நம்பியமக்கள், இன்று, வானவூர்தியிலே பறந்தபடி, நம்முடைய மூதாதையர் கட்டிவைத்த புராணத்தை நாம் இன்றும் நம்பி, நடத்துகிற சூரசம்ஹாரத்திருவிழாவைப் பார்த்து, கேலி செய்கிறார்கள்! விண்ணும் மண்ணும், ஒளியும் ஒலியும், இன்று அங்கெல்லாம், ஆராய்ச்சிக் கூடத்திலே உள்ள மக்களால், அலசப்பட்டு, பயன் மிகு பல புதிய நுண்ணறிவு பரப்பப்பட்டு வருகிறது. நாமோ இன்னமும், திரிபுர தகனம் முதற் கொண்டு திருத்துழாய் மகிமை வரையிலே, ஒன்று விடாமல், நம்பியும் புகழ்ந்தும், பாராட்டியும், கெடாதபடி பாதுகாக்க முயற்சித்தும், கீதம், காட்சி, ஓவியம், காவியம் முதலிய பல சாதனங்களைக் கொண்டு அந்தப்பழமையைக் காப்பாற்றியும் வருகிறோம்! இதுதான் உலகின் அறிவுள்ள பகுதிக்கும் நமக்கும் உள்ள வித்யாசமேயொழிய, இங்குள்ளசில பரணமனப் போக்கினர் கூறுவது போல, அற்புதமான கற்பனைகளை ஆக்கின திறம் நமது முன்னோர்களுக்கு மட்டுமே உண்டு, உலகில் வேறு எவருக்கும் கிடையாது என்பது உண்மையல்ல! கற்பனைக் கதைகள் கட்டினதிலே, நமது மூதாதையருக்கும் உலகின் வேறு பகுதியிலே இருந்தவர்களுக்கும், வித்யாசம், அதிகம் கிடையாது. பல தலைச்சாமிகள்! பறக்கும் சாமிகள்! பெண்களைப்பலி கேட்கும் தெய்வங்கள்! பேருருவத் தேவதைகள், போன்ற கற்பனைகளை, எங்கும் எவரும் கட்டித்தான் பார்த்தனர். அங்கெல்லாம், அறிவு பரவியதும், ஆதும்லா, யெமர் போன்ற கற்பனைகளை, விட்டொழித்து, உண்மையை மக்கள் நாடினர். நாமோ, உண்மையைக் காணவேண்டுமென்றஉணர்ச்சியைக்கூடக் கொள்ளாமல், பழம் கதைகளை இன்னும் பயனுள்ளவை, பொருளுள்ளவை, புனிதமானவை. பாராட்டத் தக்கவை, பூஜிக்கத்தக்கவை, பழுதுபடாதபடி பாதுகாக்கத்தக்கவை என்று எண்ணி ஏமாறுகிறோம். இந்த மகத்தான வித்தியாசந்தான் இருக்கிறது, நமக்கும், உலகின் மற்றப்பகுதிக்கும். இந்த ஒரு வித்யாசம்! ஆனால் எவ்வளவு பெரிய வித்யாசம்!! பெண் எலும்புருவாவதைத் தடுக்கத்தெரியாமல் எலும்புருவைப் பெண்ணாக்கிய பெம்மானின் கதையைப்போற்றும் நமக்கும், அவர்களுக்கும் உள்ள வித்தியாசம், எவ்வளவு பெரியது! அதோ தெரிகிறதே நமது இரட்டைமாட்டுவண்டி, அதற்கும், மேலே மேகமண்டலத்தூடே பறக்கும் விமானத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம் அல்லவா அது! காட்டேரி பூஜைக்கும் கம்பியில்லாத் தந்திக்கும், இடையே எவ்வளவு வித்தியாசம்!!

பூமி எப்படி ஏற்பட்டது என்பதற்கு, ட்யூடன் மக்கள் கொண்டிருந்த, அர்த்தமற்ற கருத்தை அவர்கள் விட்டொழித்தனர் — நாமோ இன்னமும், பூமாதேவி — அண்ட சராசரங்களையும் ஆதிசேஷன் தாங்குவது — இரண்யாட்சதன் பூலோகத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டுபோய் ஒளித்துவிட்டது போன்ற கதைகளை, புண்ய கதைகள் என்று நம்புவதும், இந்த நம்பிக்கைக்கு ஏற்றபடியான பூஜைகள் செய்வதும் திருவிழாக்கள் நடத்துவதுமாகக் காலந்தள்ளுகிறோம். சரியா? மேனாட்டினர், பூமியைப்பற்றி ட்யூடன் புராண மனப்பான்மை அளவிலேயே இருந்துவிட்டிருந்தால் இன்று பூமிக்கடியில் உள்ள புதைபொருளை வெட்டி எடுக்கும் வேலை நடந்திருக்க முடியுமா, அதன் பயன்களை நாம் இன்று அனுபவிக்கிறோமே, அதுதான் சாத்தியமாகுமா! பேரசுரனின் மண்டை ஓடுதான் விண் என்ற வீண்கதையோடு மேனாட்டினர் தங்கள் அறிவுக்கு முடிவு கட்டிவிட்டிருந்தால், இன்று, ஏற்பட்ட ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்குமா! —அந்த ஆராய்ச்சியின் பலன்களை அனுபவிக்கிறோமே, அனுபவித்து அகமகிழ்கிறோமே, அப்போதாவது, அறிவுக்கு வேலை தருகிறோமா — —நன்றியறிதலைபாவது காட்டுகிறோமா! பழத்தைத் தின்றுவிட்டு, தோட்டக்காரன்மீது திப்பியைத் துப்பும் கொடுமைபோல, அந்த ஆராய்ச்சியாளர்கள் அளித்த அருமையான சாதனங்களை உபயோகித்துக்கொண்டே, அந்த ஆராய்ச்சியாளர்களெல்லாம், ஆத்மார்த்தம் அறியாதவர்கள், அழகிய கற்பனைகள் செய்யத்தெரியாதவர்கள், என்று நையாண்டியும் செய்கிறோம்! நியாயமா? நாம் கண்டுபிடிக்காத, (கண்டுபிடிக்கமுடியும் என்ற எண்ணமும் கொள்ளாத நாம்) ரயிலில் பிரயாணம் செய்து, எங்கே போகிறோம்? பிள்ளைவரம் கேட்க ராமேஸ்வரமோ முடிதர திருப்பதிக்கோ, பெரிய பாளையத்தாளின் பொருளைத் தேடியோ! இந்தப்பழைய சாதனங்களைத்தேடிச் செல்வதற்கு அவர்கள் அளித்த புதியபொருள்களை உபயோகிக்கிறோம், அப்போதாவது ஒரு துளி நன்றியறிதல்! ஒருதுளிபாராட்டுதல் உண்டா? இல்லை, இல்லை! உழைப்பாளியின் வியர்வையால், பன்னீர் பெறுகிற முதலாளி, பாட்டாளியை எப்படிப்பரிகசிக்கிறானோ, அதேபோலத்தான், புத்தறிவாளர்கள் தரும் சாதனங்களை, வசதிகளை, நன்றாகப் பயன்படுத்திக்கொண்டே, பழைமை விரும்பிகள், அந்தப்புத்தறிவைக் கேவலமாகப் பேசுகின்றனர். புத்தறிவைப்பழிக்கும் புல்லறிவாளர்கள், இன்று, எந்தெந்தக் கற்பனைகளைக்கட்டிப் பிடித்துக்கொண்டு விட மறுக்கிறார்களோ, அந்தக்கற்பனைகளிலே காணப்படும் வாழ்க்கை நிலைக்குச் செல்லச் சம்மதிப்பரா என்றால், சம்மதிக்கமாட்டார்கள்! மின்சாரவிளக்கு மங்கினால், இவர்களின் கோபம் பொங்கும்! விஞ்ஞானப்பொருள் கிடைக்கத்தடை ஏற்பட்டால், இவர்களின் வாழ்வே மங்கும்! ஆனால் அந்த வசதிகள் தங்குதடையின்றி, மாற்றார் உற்றார் எனும் பாகுபாடு இன்றி, கிடைக்கிற காரணத்தால், அவைகளை உபயோ

கித்துக்கொண்டே என்ன லன் இவைகளால்! என்றும் பேசத்துணி கின்றனர்.

மதவாதிகள் விதித்திடும் நிபந் தனைகளைப்போல, விஞ்ஞானிகளும் விதித்தால், வேடிக்கையாக இருக் கும், இத்தகையவர்களின் நிலைமை!

வைணவராக வேண்டுமா? திரு நாமம் தரிக்கவேண்டும்! திருப்பாவை படிக்கவேண்டும்! திருத்துழாய் நீர் பருகவேண்டும்! என்று, சிலபல நிபந்தனைகள் விதிப்பதுபோல, "ரயி லில் பிரயாணம்செய்யவேண்டுமா?" —"சரி! புத்தறிவின் விளைவு இந்த ரயில்! இதிலேறிச் செல்லவேண்டு மானால் புத்தறிவுகொள்ளவேண்டும். உனக்குஅந்தப்புத்தறிவு இருக்கிறதா என்று பார்க்கிறேன்" என்று ஆரம் பித்து, ரயிலில் பிரயாணம் செய்ய வருபவரைப்பார்த்து,

"உலகம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டால், அவர்

"உலகம், தட்டை!" என்று பதில்கூறுவார்—அவருக்குப் பழக்க மான புராணப் பயிற்சி காரணமாக. உடனே, "ஓஹோ! உமக்கு புத்தறி வின் அடிப்படையே தெரியவில்லை. இந்த ரயில், தட்டையாக இருக்கிற உலகத்தில் ஓடுவதல்ல. உருண்டை யாக உள்ள உலகத்தது, உனக்குத் தான், உலகம் உருண்டை வடிவம் என்பதே தெரியாதே, பிடிக்காதே, புரியாதே, அப்படிப்பட்ட, நீ உன் பாட்டன் முப்பாட்டன் கால முதற் கொண்டு இருந்து வந்தபழய நம்பிக் கையான தட்டைஉலகிலே,கட்டை வண்டியில் பயணம் செய்வதே சரி யான காரியம். பழங்கால நம்பிக் கையை மறந்த மாபாவிகளான நாங் கள் கண்டு பிடித்த இந்த நவீனப் பைசாசத்தின் உதவியை நாடாதே!" என்று கூறி, டிக்கட் தர மறுத்தால், வேடிக்கையாக இருக்கும்.

பத்தியமில்லாத மருந்து போல, உரித்த சுளை போல, நிபந்தனையற்ற நிலையில், சகல விஞ்ஞான வசதி களும், பாடுபடாதவருக்கு மிகமிகச் சுலபத்திலே, தரப்பட்டு விட்டதால், அவைகளின் பயனை அனுபவிக்கும் நேரத்திலும் கூட, பழமைக்குப் பாராட்டும் போக்கு இருந்து வருகி றது. பாடுபட்டுத் தேடாத பொருள், அருமை தெரியக்காரணம் இல்லை யல்லவா! இதனாலேதான், புத்தறிவை அலட்சியமாகப் பேசும் புல்லறிவு தலை விரித்தாடுகிறது. ரயிலேறி ராமேஸ்வரம் போவதும், ரோடரி மிஷினில் ரமணர் நூல் அச்சாவதும், ரேடியோவில் சங்கராச்சாரி பேசுவ தும், காமிரா கொண்டு கருடசேர் வையைப் படம் பிடிப்பதும், டெலி போன் மூலம் தெப்ப உற்சவ நேரத் தைவிசாரிப்பதும்,—இவை போன்ற வைகள், இங்கு நித்ய நிகழ்ச்சிகள், அல்லவா? இந்த நிலை சரியா? பல் துலக்குவதற்குத் தயாரிக்கப் படும் பசையை பாத்திரம் துலக்கப்பயன் படுத்தினால்— கல் உடைக்கும் கரு வியைக் கொண்டு கனியைத் தாக்கி னால், புலி வேட்டைக்குரிய துப்பாக் கியைக்கொண்டு எலியைக்கொல்லக் கிளம்பினால்,—என்ன எண்ணுவர்— என்ன கூறுவர்! அது போல, புத்த றிவு, புதிய வாழ்வுக்கு வழி செய்ய ஏற்பட்டிருக்கஅந்தப்புத்தறிவு தரும் சாதனங்களைக்கொண்டு, பழயவாழ்க் கையை நடத்த முற்படுபவரைப் பற்றி, என்ன எண்ணுவது, என்ன கூறுவது! ஏன் அவர்கள், இத்தகைய போக்குக் கொள்கின்றனர்! அதற் குள்ள பல காரணங்களிலே ஒன்று, பழய காலக் கற்பனைக் கதைகள் நமது மூதாதையரின் அபாரமான அலாதியான திறமைக்குச் சான்று, என்ற தவறான எண்ணம்; அத்த கைய கற்பனைகள், உலகிலே எங்கும் எந்தநாட்டவரும் செய்தறியாதன என்ற தவறான பிரசாரம். இதன் காரணமாக, அந்தப்பழய கதை களிலே விடாப்பிடியான பற்று, ஏற் பட்டிருக்கிறது. நண்பர்களே! நமது நாட்டிலே மட்டுமல்ல, நானிலத்திலே பல் வேறு இடங்களிலேயும் பழங் காலத் திலே, இப்படிப் பலப் பல கதைகள் உலவின. அவர்களெல்லாம், அந்தக் கதைகள் பயனற்றன என்று கண் டறிந்து, புத்தறிவு பெற்றனர், என் பதை எடுத்துக் கூறவே ட்யூடன் புராணீகன், பிரபஞ்சம் எப்படி உற்பத்தியாயிற்று என்று கதை புனைந்தான் என்பதைக் காட்டி னேம். ட்யூடன் கதையை மறந்து, அவர்கள் நியூடன் காலத்தில் புகுந்து, இன்று, அதற்கு அப்பாலும் சென்றுள்ளனர். யெமருக்குப் பால் கொடுத்த பசுவின் கதை கேட்டு மகிழ்ந்த காலத்தை மறந்து, காளை யின்றிப் பசு, கன்று போடும் காலம் வரை வந்துள்ளனர்! மண்டை ஓடே, வான மண்டலம் என்ற கதைக் காலத்தைத் தாண்டி, வான மண்ட லத்திலே காணப்படும் சந்திர மண் டலம் சென்று வரக் கற்றுக்கொள் ளும் காலத்துக்கு வந்துள்ளனர். பேரசுரனின் இரத்தமே கடல் என்ற கதைக் காலத்தைக் கடந்து, பல தினங்கள், நீர்மூழ்கிக் கப்பலில் தங்கி, கடலுக்கடியே இருக்க முடி யும் என்ற ஆராய்ச்சிக் காலத்தில் புகுந்திருக்கிறார்கள். நாம்? இன்ன மும் நரி பரியான பதிகத்துக்கு நாற் பத்து எட்டாவது விருத்தி உரை எழுதுபவருக்கு, நாமகள் தாசனார் விடுகரும்மறுப்புரையைப்பிரசுரிக்கும் நற்காரியத்தில்ஈடுபட்டுக்கொண்டும், நமக்கு மட்டும் ஏனய்யா, இந்த நம்பொணாக் கதைகள்! நானிலத்தில் வேறு எங்கும் இவைதமை நம்புவார் இல்லையே என்று கேட்போரை நாத் தீகர் என்று தூற்றும் 'சத்காரியத் தில்' ஈடுபட்டுக் கொண்டும், இருக் கிறோம். சரியா? முறையா? தகுமா? கூறவேண்டாம்! எண்ணிப் பாருங்கள்!!

✲


தைப்பொங்கல் திருநாளில், தமிழர் வளர்க்கும்

பத்திரிகையின்பொங்கல் மலர்,

வருகிறது!

**"பொன்னி" பொங்கல் மலர்.**

பலவர்ண ஓவியப் புதுமைகள்!

காட்சியுடன் மிளிரும் கவிதைச் சுவைகள்!

பிரதிகளுக்கு முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விலை ரூ 2—8—0** தபால் செலவு 0—8—0

**'பொன்னி' அலுவலகம்.**

த. பெட்டி. 39, புதுக்கோட்டை.

பட்டி மன்றம்

# ★ கல்வித் திட்டம் ★

[ஏ. ஜி. ரத்னம்]

கான்ஸ்டாண்டிநோபிள், பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் துருக்கியர் கையில் அகப்பட்டதும், கிரேக்க நூல்களைக் கற்றறிந்த நிபுணர்கள், இத்தாலியிலுள்ள 'பிளாரென்ஸ்' நகரில் தங்கினார்கள். அவர்கள் மூலம் கலைகள் பரவ ஆரம்பித்தன. இங்கிலாந்து, பிரான்ஸ், இன்னும் பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் அறிவு வளர்ச்சி, கலைவளர்ச்சியாகிய இவ்வியக்கங்கள் பரவின. அதன் பயனாக 'இவ்வுலக வாழ்வு மறுமை வாழ்விற்குப் பயிற்சி இல்லை' என்பதை அறிந்தனர். வாழ்க்கையின் அனுபவத்தைப் பூர்ணமாய்ப் பெற விரும்பினர். வாழ்க்கைச் சௌகரியத்திற்குப் பல புதிய கருவிகளைக் கண்டு பிடிக்கவும், வாணிபம், குடியேற்றம், அதிகரிக்கவும் தூண்டப்பட்டனர். மத குரு தாமஸ் பெக்கேட்டின் மிதியடியை முத்தமிடக் கேட்டுக் கொண்டபோது 'தன் ஆன்மா காப்பாற்றப்பட இது தேவையில்லை' என்று காலே கூறினார். அதற்குப் பதில் கிரேக்க, லத்தீன் கல்வியைக் கற்பிக்க இங்கிலாந்தில் புதிய கலாசாலைகள் நிறுவினார். பெக்கெட் அணிந்திருந்த முத்தாபரணங்களை நினைவுக் குறியாய்ப் பாதுகாப்பதைவிட அதை விற்று ஏழைகளுக்குக் கொடுப்பது மேல் என்று அறிந்து அவ்விதம் செய்தார். அச்சுப் பொறி கண்டு பிடித்தார் அங்கே. மடமையைக் கொளுத்த மகா வீரன் ஒருவன் தோன்றினான். புரட்சி எழும்பியது பிரான்சில்—பரவிற்று பல்நாட்டிலும்—அடங்கவில்லை புரட்சி, மடைமை நீங்கும் வரை; படிப்புப் பரவும் வரை; முடியாட்சி வீழ்ந்து குடியாட்சி ஏற்படும் வரை. இதைத்தான் 'கல்வியின் புதுப் பிறப்பென்று சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள்.

ஆட்சித்திட்டம், அறிவு வளர்ச்சி, வாழ்க்கை இன்பம் இவைகளை அறிய முடியாதபடி செய்த ஆட்சியின் பிடி தளர்ந்து ஒழிந்தும் அவர்கள் நடக்கு வகுத்த கல்வித்திட்டத்திற்குப் புதுப் பிறப்புக் கிடையாதா? கல்வியறிவு இல்லாத மக்களை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்த வேண்டுமென்று நினைக்கிற அரசியல் ... அநேக நாட்கள் ஓடாது. மக்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியாது. மேடைச் சொற்பொழிவுகள் சட்டசபையில் வீற்றிருப்பதற்காக, அமைச்சராவதற்காக, மக்கள் வாக்குரிமையைப் பெற்ற ஆட்சியோ என்று மக்கள் உணரும்காலம் வரின், அவர்கள் எழுச்சியை அடக்க எந்த அரசியலாலும் முடியாது. சர்வ வல்லமை பொருந்திய பொது மக்களின் சக்தி—புனித வாக்குரிமை போலித்தனமாக்கப்படுகிறது. வாக்குரிமையின் வன்மையை மக்கள் அறியும்படி கல்வியறிவைப் பெருக்கினாலன்றோ மக்களின் இன்னல்களைப் போக்கித் தேவையைப் பூர்த்திசெய்யும் மந்திரி சபையை மக்களால் அமைக்க முடியும். ஆட்சிப் பீடமும் அசையாமல் ஆளுகை செய்ய முடியும்.

உலக சரித்திரம் சொல்லவில்லையா, முடியாட்சியை வீழ்த்திய கட்சிகள் உடனே செய்தது, மக்களின் கலை அறிவைப் பெருக்கக் கல்வித் திட்டத்தைத் திருத்தியமைத்தது என்று. ஆதலால் இன்று நம் நாட்டிற்கு வேண்டியது கலையை வளர்க்கும் புதிய கல்வித் திட்டமன்றோ. உடனே நாட்டிலுள்ள எல்லாப் பிள்ளைகளும் (ஆண் பெண்) எட்டாவது வகுப்புவரை கட்டாயம் படித்துத் தீர மாணவ கட்டாயப் பள்ளிகள் ஏற்படத் திட்டம் செய்யவேண்டும். அடுத்தது 18 வயதிற்கு மேற்பட்ட கல்வியறிவு இல்லாமல், விவசாயம், கைத்தொழில், வியாபாரம், மருத்துவம் இன்னும் பிற தொழில்களை இன்று நம் நாட்டில் செய்துவரும், ஆண்பெண் இருபாலரும் தங்கள் தொழில்களை காலை ஒன்பது மணிக்குமேல் ஆரம்பித்து மாலை ஐந்து மணிக்குள் முடித்துவிடும்படி சட்டம் செய்யவேண்டும். காலையில் ஒன்பது மணிக்கு முன்னும் மாலையில் ஐந்து மணிக்குப் பின்னும் நடத்தப்படும் கட்டாய தொழிற் பள்ளிகள் ஏற்படுத்தவேண்டும். அந்தப் பள்ளிகளில் அவர்களுக்குப் பொது அறிவை ஊட்டுவதோடு, அவரவர் தொழிலுக்குத் தக்க தொழில் பிரிவு வகுப்புகள் ஏற்படுத்தி அதில், தொழிற் கல்வி பயின்ற அறிஞர்களைக் கொண்டு மக்கள் தங்கள் தொழில்களைப் புது முறையில் விருத்தி செய்யும் வகையைக் கற்றுக்கொடுக்கத் திட்டம் செய்யவேண்டும். எல்லாத் தொழிற் பிரிவு வகுப்புகளிலும் அவரவர் தொழிற்படி பெண்களுக்கு இடம் இருப்பதோடு மட்டுமின்றிப், பிற்கால சந்ததியைப் புதிய முறையில் வளர்க்கக் கற்றுக்கொள்ளும் பிரிவு வகுப்புகள் ஏற்படவேண்டும். விவசாயம், கைத்தொழில் இன்னும் இது போன்ற தொழில்களுக்குத் தற்காலம் கண்டுபிடித்து மேலை நாட்டார் பயன்படுத்தும் நவீனக் கருவிகளைக் கற்றறிந்த அறிஞர்கள் வசம் ஒப்புவித்து, அவர்கள் தொழிற் பிரிவு வகுப்புகளிலும், மக்கள் தொழில் செய்யுமிடங்களிலும் அக்கருவிகளை உபயோகித்துக் காட்டியும், மக்கள் உபயோகிக்கும்படியும் பழக்கவேண்டும். விவசாயம், கைத்தொழில், வியாபாரம், மருத்துவம் இன்னும் இதுபோன்ற தொழில் கற்றுத்தேர்ந்த அறிஞர்கள் உடனடியாக நம் நாட்டில் கிடைக்கவில்லை என்றால், மேலை நாட்டில் கடன் வாங்க ஏன் தயங்கவேண்டும்! பொருள் இல்லை என்ற பீதியா? தனி மனிதன் பொருள் திரட்டப் பயன்படுத்தும் படக் காட்சிகளை (சினிமா) பொது மக்களுக்குப் பயன் பயக்கும் திட்டங்களைநிறைவேற்றத்தேவைப்படும் பொருள் திரட்ட ஏன் அரசாங்கம் எடுத்து நடத்தக்கூடாது. நாடகம் ஆடியும், இன்னிசை விருந்தளித்தும் பொருள்திரட்டும் இசைவாணிகள், இசைவாணர்கள், நடிகைகள், நடிகர்கள் முதலியோர்களை ஏன் அரசாங்கம் மாதச் சம்பளம் கொடுத்து அரசாங்கத்திற்குப் பொருள் திரட்டப் பயன்படுத்தக் கூடாது! அரசாங்கம் துணிந்து தூயநோக்குடன் திட்டம் தீட்டின், இதுபோன்ற அநேக முறைகள் இருக்கின்றன.

மேலே குறிப்பிட்ட மாணவர் கட்டாயப்பள்ளியும், முதியோர் தொழில் முறைக் கல்வியும் மூன்று கல்சுற்றளவுக்கு ஒன்றல்ல, ஐந்நூறு மக்கள் தொகை கொண்ட ஒரு ஊருக்கு மாணவ கட்டாயப் பள்ளி ஒன்றும், பதினெட்டு வயதிற்கு மேற்பட்டு நாற்பத்தைந்து வயதிற்கு உட்பட்ட கல்வியறிவில்லாத ஆண் பெண் இருபாலரும், பொது அறிவு, தொழில் முறைக்கல்விபெறக்கட்டாயப் பள்ளி ஒன்றும், ஏற்பட உடனே திட்டம் தீட்டவேண்டும்.

இந்த முதியோர் தொழில்முறைக் கல்வியின் அடிப்படைத் திட்டத்

தைக் கொண்டே எட்டாவதுவகுப்பு வரையுள்ள கட்டாயப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பாடத் திட்டம் அமைக்கப்பட வேண்டும். ஆனால் மாணவர் கட்டாயப் பள்ளித் திட்டத்திற்கும் முதியோர் கட்டாய தொழில் முறைக் கல்வித் திட்டத்திற்குமுள்ள இரண்டு வித்தியாசங்களாவன:-மாணவ கட்டாயப்பள்ளிகளில் மொழிகளுக்குள்ள முக்யத்துவம், முதியோர் கட்டாயத்தொழிற் பள்ளியில், தொழில் முறைக் கல்விக்கே உண்டு.

மேலும் உயர் நிலைப்பள்ளியில், மாணவன் எந்தத் தொழிற்பாடத்தில், மாணவ கட்டாயப் பள்ளியில் படித்தபோது அதிக முன்னேற்றம் காட்டியிருக்கிறானோ, அந்தத்தொழிற் பிரிவு வகுப்பில், ஆசிரியர்கள் நன்கு கலந்து ஆலோசித்துச் சொல்லும் ஏகோபித்த அபிப்பிராயப்படி சேர்த்துக் கொள்ளப்படுவான். ஆனால் முதியோர் கட்டாயத்தொழில்முறை பள்ளியில் அவர்கள் ஏற்கெனவே தங்கள் வாழ்க்கையை நடத்த என்ன தொழில் செய்துவருகிறார்களோ அந்தத் தொழில் பிரிவு வகுப்புக்களில் சேர்க்கப்படவேண்டும். உதாரணமாக விவசாயம் செய்து வருகிறவன் விவசாயத் தொழிற் பிரிவு வகுப்பிலும், கைத் தொழில் செய்து வருகிறவன் கைத்தொழிற் பிரிவு வகுப்பிலும் சேர்த்துக் கொள்ளப்படுவான். எட்டாவது வகுப்புவரை கட்டாயப் பள்ளியில் பயின்ற மாணவன் உயர்நிலைப் பள்ளியில் நான்காவது படிவத்தில் சேர்ந்து படிக்க முடியாதபடி தொழில்செய்யத்தூண்டப்பட்டு, பள்ளியை விட்டு நீங்க நேரிடின், அவன் தன் தொழிலை செய்து கொண்டே முதியோர் கடடாயப் பள்ளியில் தன் தொழிலுக்கேற்ற தொழில் பிரிவு வகுப்பில் சேர்ந்து படித்து அத் தொழிலில் முன்னேற்றமடையலாம்.

மேலே சொல்லப்பட்ட கல்வித் திட்டத்திற்கு, பாடத் திட்டம உடனே திருத்தி அமைக்கப்பட வேண்டும். எல்லாத் தொழிற்கல்வியும் தாய் மொழியிலேயே நடைபெற வேண்டுமென்பது இங்கு கூறாமலே விளங்கும்.

ஆகையால் எல்லாக்கலைச் சொற்களும் இனிய, எளியதமிழ் மொழியில் ஆக்கிய நூல்கள் எழுதப்பட வேண்டும். ஆனால் கலை அறிவுக்காக, உலகத் தொடர்புக்காக ஆங்கிலம் மாணவர் பள்ளிகளில் முதல்ப்படிவம் முதல் இரண்டாவது மொழியாகப் படிக்கவேண்டும். கணக்கு, நிலநூல், பொது அறிவு, பொது வரலாறு பள்ளி இறுதிவரை எல்லா மாணவர்க்கும் பொதுப் பாடமாக இருப்பதோடு, வியாபாரம், கைத்தொழில், விவசாயம், மருத்துவம் போன்ற தொழிற்பிரிவுப் பாடங்களும்; தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிப்பாடமும் நான்காவது படிவத்திலிருந்து விருப்பபாடமாக அமைய வேண்டும். மொழியையோ அல்லது தொழிற் பிரிவையோ விருப்ப பாடமாக எடுத்துப் படித்துக் கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள் அந்தந்தப்பாட ஆசிரியராவார்கள். இவர்கள் அரசியல் அலுவல்கள் எதற்கும் தகுதியுடையவராவார்கள். இதன் மூலம் சில கல்லூரிகளையும் குறைக்கலாம். ஆறாவது படிவத்திற்குமேல் ஒருவன் தொழில் செய்து கொண்டு, கல்லூரியில் சேராமலே தனியாகப் படித்தும் தேறலாம்.

எனவே, ஐந்நூறு மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் எட்டாவது வகுப்பு வரையிலுள்ள மாணவர் கட்டாயப் பள்ளி ஒன்றும், முதியோர்கட்டாயப்பொது அறிவுத் தொழிற் பள்ளி ஒன்றும் வேண்டும்.

பத்துமாணவகட்டாயப் பள்ளிகள் சுற்றியுள்ள ஓர் இடத்தில் ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கவேண்டும். பத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு கல்லூரியாவது வேண்டும். தொழில், மொழி, விஞ்ஞானம இவைகளை ஆராய்ந்து முன்னேறக், கல்லூரிகளில் ஆராய்ச்சிச் சாலைகள் ஏற்படவேண்டும். கல்லூரிகளில் கண்டு பிடிக்கப்படும் ஆராய்ச்சியின் பயனை முதியோர்கட்டாயத்தொழிற் பள்ளியில அனுபவத்திற்குக்கொண்டு வரவேண்டும். இப்பிரிவுகளில் பள்ளியமைப்பதே எதிர்காலத் தமிழகத்திற்கு ஏற்ற கல்வித்திட்டமாகும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

தற்கேற்ற முறையில் மாறுதல் செய்து கூலிக்கு உழவைக்கலாம், வாங்க முடியாத நிலையில் இருப்பதால். இந்த முறையில் உழுவதால் ஒரு ஏக்கரா நிலத்தை 4 அல்லது 6 மாதங்களாக உழுவது, பயிரிடுவதைச் சுமார் 40 நாட்களிலே முடிக்கலாம். மற்ற நாட்களில் அவன் கல்வியறிவு பெறலாம்.

இனி, இராசாயன எருக்கள் உபயோகிப்பது பற்றி ஆராய்வோம். பயிர்கள் ஆரம்பத்தில் வளருவதற்கு இன்றியமையாதது பாக்டீரியா (Bacteria) சத்துக்களாம். இவை நாம் உபயோகிக்கும் சாணத்தில் (Cowdungs) அதிகமாகக் காணப்படுகிறது. இதை நம் விவசாயிகள் பெரும்பாலும் வயல்களுக்குஉபயோகிக்காமல் வரட்டிகளாக்கி அடுப்பு எரிக்கிறார்கள். கல்வி அறிவு—விவசாய அறிவு இல்லாத காரணத்தால் தான் சாணத்தின் அவசியம் தெரியவில்லை. சாதாரணமாக ஒரு ஏக்கரா நிலத்தில் சாணம் உபயோகிக்காது பயிரிட்டால் சுமார் 1374 பவுண்டு தானியம் விளைவிக்கலாம் என்று தெரிகிறது. சாணம் உபயோகித்தால் அதே நிலம் சுமார் 3,556 பவுண்டு தானியம் கொடுக்கின்றது. இதிலிருந்து சாணத்தின் அவசியம் நன்கு விளங்குகின்றதல்லவா! ஆகவேதான் ஒவ்வொரு விவசாயியும் படித்தவனாக இருக்கவேண்டும்.

அதே நிலத்தில் சாணம் தவிர்த்து எலும்புச் சத்துக்களும் சிலரசாயன உப்புச் சத்துக்களும் (Saltpetre) உபயோகித்தால் ஏறக்குறைய 4,339 பவுண்டாக பயிரின் விளைவு காணப்படுகிறது. அதாவது 3 மடங்குக்குக் கதிகமாகப் பலன் கிடைக்கிறதென்றால், இதைவிட விவசாயிக்கு இலாபம் வேறென்ன இருக்கமுடியும்? உற்பத்தி ஒரு மடங்கு இருந்து, நாம் அதிலேயே காலம் தள்ளுவதைவிட மூன்று மடங்குஅதிகமாக உற்பத்தி பெருகினால் ஏன் பஞ்சம் வரும்? அரசாங்கம் தான் இவர்களுக்கு முன்னின்று உதவி செய்யவேண்டும். ஒருவருடப் பயிற்சி அளித்தால் பின்னர் அவர்களுக்குப் போதிய உதவி

(16-ம பக்கம் பார்க்க)

Edited, printed, Published by C. N. Annadurai, at Dravida Nadu Press
55, Tirukkachinambi Street. Conjeeveram.